T. 2066

T. 2066

Acc 12068

Madras Government Oriental Series.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
9 JUL 1955
TRIPLICANE P.O., MADRAS

PUBLISHED UNDER THE AUTHORITY

OF

THE GOVERNMENT OF MADRAS.

Complimentary Copy

HONORARY SECRETARY,
T. M. S. S. M. Library Committee.

...itor :

...RAN, M. A., L. T.,

...nuscript Library, Madras.

...II.

# தாள் சமுத்திரம்.

தஞ்சை ஸரஸ்வதீ மஹால் வெளியீடு நெ. 50

# தாள சமுத்திரம்

(தாளத்தைப்பற்றிய ஓர் அரிய நூல்)

பதிப்பாசிரியர்:

சங்கீத கலா சிகாமணி

ஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரிகள், B. A.,

ஆராய்ச்சி ஆசிரியர், சரஸ்வதி மஹால்.

---

தஞ்சை சரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவக் காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L., அவர்களால்

வெளியிடப்பட்டது.

1955

விலை ரூ. 3-0-0

T. 2066

# PREFACE

This publication contains a very rare old Tamil treatise on "Tāla", named "Tālasamudram". Text books on music and dance are said to have been in existence in the Tamil land even from the days of the first Sangam. This fact is clear from the name "Muttamizh" given to Tamil literature and its division into "Iyal Tamizh", "Isai Tamizh", and "Nāṭaka Tamizh" from the earliest days.

The author of Silappadhikāram writing in the first century A. D. refers to technical terms in Music, Tāla and Dance. The commentator of the work who belonged to the 12th century has deplored the loss of old treatises in Tamil on Music and Dance with reference to which the author of "Silappadhikāram" has used the terms; and he mentions a few works that were still extant in his time. But even they are not available today.

On Tāla in particular, a treatise called Tāla Vagai Ottu is referred to by the commentator of Silappadhikāram. But it is not available now. The only works in Tamil available today in which Tālas are dealt with are, the present work, another called "Chachchaputa Venba" and a third called "Bharata Sangraham".

The last work has recently been published under the auspices of the Annamalai University. It contains valuable material on Nāṭya and Tāla. But the text and the commentary await a clear exposition for being understood. The second work gives only the constituent parts of the 108 Tālas in Venba meter. The

manuscript of that work which was far from perfect was brought from the Dharmapuram Mutt to the Saraswathi Mahal, Tanjore for correction. Fortunately, there were two old Sanskrit treatises on Nātya viz., Bharatārṇavam and Ādi Bharatam in this Library which contain an exactly similar description of the Tālas. These were used for correcting the text and the book has been published under the auspices of the Dharmapuram Mutt.

The present work contains a clear account of the formation of Tālas and of the ten elements called Tāladaśaprāṇas that go to build up the Tālas. It also contains descriptions of the hundred and eight Tālas, in couplets.

Besides the manuscript in the Saraswati Mahal, there is one in the Oriental Manuscripts Library, Madras and another in the Mahamahopadhyaya U. V Swaminatha Iyer's Memorial Library, Kalākshetra, Adyar. Of the three, the manuscript in the Oriental Manuscripts Library has been of great use in filling gaps due to injured leaves in our manuscript. The Adyar manuscript has also been of use in collating the text. The additional verses found in the two latter manuscripts are given in the footnotes to the text and in the appendix printed at the end of the work. There are two versions of the couplets describing the Tālas, one in the manuscript of our Library and the other in that of the Oriental Manuscripts Library. Both have been given in this publication as well as the parallel descriptions in the old Sanskrit treatises of Bharatārṇavam and Ādi Bharatam. All the manuscripts are

incomplete towards the end where the mathematical short-cuts for determining the number and order of the permutations and combinations of the constituent parts of the Tālas are dealt with. The Editor's introduction has supplied the deficiency.

The book has been carefully edited with a learned introduction throwing light on some of the obscure points on the subject by our research Pandit, Sri K. Vāsudeva Sāstri B. A., and our thanks are due to him for his valuable services.

It is hoped that this publication will be found useful to students of music and dance and to research-workers in the field.

Our thanks are due to the Government of Madras for their liberal grants that have enabled us to publish this and other valuable Manuscripts of this Library.

Saraswati Mahal,
Tanjore.
10—2—55

S. GOPALAN,
*Hony. Secretary.*

# GENERAL INTRODUCTION

TO THE

# Madras Government Oriental Series.

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important manuscript libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10 Education dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are members of the Committee:

1. Sri T. M. Narayanaswami Pillai, M. A., B. L.,
2. „ R. P. Sethu Pillai, B. A., B. L.,
3. „ C. M. Ramachandra Chettiar, B. A., B. L.,
4. Sri R. Krishnamoorthy, (Kalki)
5. Dr. N. Venkataramanayya, M. A., PH. D.,
6. Sri M. Ramanuja Rao Naidu, M. A., L. T.,
7. „ V. Prabhakara Sastri,
8. „ N. Venkata Rao, M. A.,
9. „ H. Sesha Ayyangar,
10. „ Masthi Venkatesa Ayyangar, M. A.,
11. „ M. Mariappa Bhat, M. A., L. T.,
12. Dr. C. Achyuta Menon, B. A., PH. D.,
13. „ C. Kunhan Raja, M. A., D. PHIL.,
14. „ A. Sankaran, M. A., PH. D, L. T.,
15. Sri P. S. Rama Sastri,
16. „ S. K. Ramanatha Sastri,
17. Dr. M. Abdul Haq, M. A., D Phil. (Oxon),
18. Afzul-ul-Ulma Hakim Khader Ahamed,
19. Sri P. D. Joshi,
20. „ S. Gopalan, B. A., B. L.,
21. „ T. Chandrasekharan, M. A., L. T.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Marathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government in G. O. No. Mis. 2745 Education dated

31—8—1949 and they decided to call these publications as the "**Madras Government Oriental Series** and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications.

The following manuscripts have been taken up for publication during the current year:

## 'A' From the Government Oriental Manuscripts Library, Madras.

### TAMIL.

1. Kappal Sattiram
2. Anubhava Vaidya Murai
3. Attanakolahalam
4. Upadesa Kandam
5. Colan Purva Pattayam
6. Konga Desa Rajakkal
7. Sivajnana Dipam
8. Sadasiva Rupam, with commentary

### TELUGU.

1. Sangitaratnakaramu
2. Aushadha Yogamulu
3. Vaidya Nighantuvu
4. Dhanurvidya Vilasamu
5. Yoga Darsana Vishayamu
6. Khadga Lakshana Siromani.

## SANSKRIT.

1. Vishanarayaniyam
2. Bhargava Nadika
3. Hariharacaturangam
4. Brahmasutravrtti—Mitaksara
5. Nyayasiddhanta Thattvamrtam.

## MALAYALAM.

1. Garbha Cikitsa
2. a. Vastulakshanam
   b. Silpasastram
   c. Silpavishayam
3. Mahasaram
4. Kanakkusaram
5. Kriyakramam

## KANNADA.

1. Lokopakara
2. Rattamata
3. Asvasastram
4. a. Aushadhagalu
   b. Vaidyavishaya
5. Sangitaratnakara
6. Supasastra.

## ISLAMIC LANGUAGES.

1. Jamil-A-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhram
4. Saffnat-Al-Najat

# 'B' From the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore.

## TAMIL.

1. Sarabhendravaidya Murai (Diabetes)
2. Do. (E. N. & T.)
3. Konkanarsarakku Vaippu
4. Tiruccirrambalakovaiyar with padavurai
5. Sarabhendra Vaidya Murai- (Anaemia & Jaundice)
6. Talasamudram
7. Bharatam
8. a. Pandikeli Vilasa Natakam
   b. Pururava Cakravarti Natakam
   c. Madana Sundara Vilasa Natakam
9. Percy Macqueen's Collection in the Madras University Library on Folklore
10. Ramaiyan Ammanai
11. Sarabhendra Vaidya Murai — (Asthma, Cough and other lung diseases)

## TELUGU.

1. Kamandakanitisaramu
2. Taladasapranapradipika
3. Raghunatha Nayakabhyudayamu
4. Rajagopala Vilasamu
5. Ramayanamu by Katta Varadaraju

## MAHRATHI.

1. Natyasastrasangraha
2. a. Folk Songs

b. Dora Dharun Veni Paddhati
c. Asvasa Catula Dumani
3. Pratapasimhendra Vijaya Prabandha
4. a. Sarabhendra Tirthavali
b. Lavani
5. Devendra Kuravanji
6. Bhakta Vilasa
7. Sloka Baddha Ramayana

## SANSKRIT.

1. Asvasastra with Tricolour Illustrations
2. Rajamrganka
3 Ananda Kandam
4. Ayurvedamahodadhi
5. Gita Govinda Abhinaya
6. a. Colacampu
b. Sahendra Vilasam
7. Dharmakutam-Sundara Kanda
8 Jatakasara
9. Vishnutattvanirnaya Vyakhya
10. Sangita Darpanam
11. Bijapallavam

*Note:*-In list "B" above, No. 5 and 11 in Tamil and No. 3 in Sanskrit were substituted for three works of the original list, which were found later to be unsuitable for publication.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books, in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

MADRAS,
1951.

T. CHANDRASEKHARAN,
*General Editor.*

| பொருள். | | பக்கம். |
| --- | --- | --- |
| ஒத்துக்கிரியை—அங்குல பிரமாணங்கள் | ... | 12 |
| பிறப்பு | ... | 13 |
| அஷ்டகண லக்ஷணம் | ... | 14—16 |
| கணத்துக்கு நக்ஷத்திரம் | ... | 16—17 |
| தாளங்களின் சாதி | ... | 17—18 |
| சதுர்மேருப்பிறப்பு, ஷண்மேருப்பிறப்பு | ... | 18—22 |
| சங்கியை | ... | 22—25 |
| நஷ்டம் | ... | 25—27 |
| லயம் | ... | 27—28 |
| யதி | ... | 28—31 |
| மார்க்கம் | ... | 31—32 |
| ஏகமாத்திரா லக்ஷணம் | ... | 33 |
| கிரகம் | ... | 33—34 |
| கஞ்சதாள லக்ஷணம் | ... | 34—36 |
| ஆவாபாதிக்கிரியை | ... | 36—37 |
| நூற்றெட்டுத்தாளங்கள் | ... | 38—91 |
| அனுபந்தம் :— | ... | 92-138 |
| காப்பு | ... | 92 |
| லகுவின் வகை | ... | 92—93 |
| மார்க்க தாளத்துக்கு விவரம் | ... | 93—96 |
| நவசந்தி தாளங்கள் | ... | 97-100 |
| நட்டுவ லட்சணம் | ... | 101-103 |
| நூற்றெட்டுத் தாளங்கள் (1—10) | ... | 103-109 |
| சூளாதி தாளங்கள் (1—5) | ... | 109-115 |
| பலவகைத் தாளங்கள் (1—7) | ... | 115-116 |
| கண்ட தாளங்கள் (1—30) | ... | 116-126 |
| சவுத சிங்காரம் (1—54) | ... | 126-134 |
| சவணிக்கை பதம் | ... | 135 |
| ஆதி தாளத்திற்குச் சொற்கட்டு ஜதி | ... | 135 |
| அடதாள சாப்பு சொற்கட்டு ஜதி | ... | 136 |
| ஜதி—பலவகை | ... | 137-138 |

# முகவுரை.

தாளம் போட்டுக் கொண்டு பாடும் போதும், தாளவாத்தியங்களோடு ஆடல் பாடல் நடக்கும் போதும், அவை ஒருவித மிடுக்குடன் விளங்குவது கண்கூடு. தாளமும் தாளவாத்தியங்களும் மனக்கிளர்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கின்றன என்பது நமது அனுபவத்தில் காணும் உண்மை. தாளத்தைக் கேட்டதும் நமது கை, கால், தலை முதலிய அங்கங்கள் அதனோடு லயித்து அசைய ஆரம்பிக்கின்றன. வெட்கம் ஒன்று இருந்து நம்மைக் கூத்தாடாமல் தடுக்கிறது. வெட்கம் என்பதை அறியாத குழந்தைகள் உடனே கூத்தாட ஆரம்பிக்கின்றன. ஆகவே தாளமானது ஆடல்பாடல்கள் நமக்கு அளிக்கும் ஆனந்தத்திற்கு உயிர்போன்ற ஆதாரமாகும்.

தாளம் என்ற சொல் 'தல்' (தல ப்ரதிஷ்டாயாம்) என்ற வடமொழி வினைப்பகுதியினின்றும் பிறந்தது. அப்பகுதிக்கு 'நிலைநிற்றல்' என்பது பொருள். பாட்டின் நடையை ஓர் கட்டுப்பாட்டுக்கு உள்ளடக்கி நிலைநிறுத்துவதால் தாளத்திற்கு அப்பெயர் ஏற்பட்டது. ஆகமநூல்களில் தாளம் என்ற சொல்லுக்கு சிவனும் சக்தியும் சேர்ந்தது என்ற பொருள்படும்படி 'தா' என்றால் சிவனும் 'ல' என்றால் சக்தியும் குறிப்பிடப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பொருள் நாம் 'கைத்தாளம்' என்று சொல்லும் இரு வெண்கலக்குமிழ்களாலாகிய 'தாளம்' என்ற வாத்தியத்திற்கு மிகப்பொருந்தும்.

தாளத்தின் பிறப்பை ஆராய்ச்சி செய்யப்புகுந்தால், அதிலுள்ள கால அளவைகள் 'குறில், நெடில், அளபெடை என்ற பொருளுள்ள லகு, குரு, ப்லுதம் என்ற எழுத்துக்களின் கால அளவைகளையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறபடியால், தாளமானது செய்யுள்களில் உள்ள சந்தத்தின் அடியாகப் பிறந்தது என்பது தெளிவு. 'சந்தம்' என்பது 'ச்சந்தஸ்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு. வேதங்கள் நான்குக்கும் முதலாக

உள்ள ரிக்வேதத்தில் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒரு வகைச் சந்தம் உண்டு. இந்தச் சந்தம் ஏற்பட்ட வரலாற்றைப் பற்றி வேதத்திலேயே ஓர் கதை காணப்படுகிறது.

தேவர்களும் அசுரர்களும் ஒரு சமயம் யுத்தம் செய்யும் போது தேவர்கள் மந்திரங்களைத் தங்கள் ஆயுதங்களாகப் பிரயோகித்தார்கள். அசுரர்கள் அவற்றை மாறுபாடு அடையும் படி செய்து விட்டார்கள். அவைகள் மாறாமல் இருப்பதற்காக அவை ஒவ்வொன்றுக்கும் ஓர் கவசம் தயாரித்தார்கள் தேவர்கள். அந்தக்கவசங்களுக்கு 'ச்சந்தஸ்' என்று பெயரிட்டார்கள். ஏனெனில் 'ச்சாதனம்' என்றால் 'மறைத்துக் காப்பாற்றல், அல்லது அதற்கு உபயோகப்படும் கருவி' என்று பொருள். அதனடியாகப்பிறந்த 'ச்சந்தஸ்' என்னும் சொல் மந்திரங்களின். குறில், நெடில், அளபெடை முதலிய மாத்திரைகளைக் கட்டுப் படுத்தி அவைகள் மாறுபாடடைந்து கெட்டுப் போகாமல் காப்பாற்றுவதையே முக்கியமான ப்ரயோசனமாகக்கொண்டது. வேதத்தில் தேவர்கள் அசுரர்கள் என்று கதை ரூபமாக வர்ணிக்கும் இடங்களில் தேவர்கள் என்றால் பண்பட்ட மனத்தின் போக்கு என்றும், அசுரர்கள் என்றால் நினைத்தபடி போகும் மனப்போக்கு என்றும் உரையாசிரியர்கள் உரை வகுத்திருக்கிறார்கள். ஆகையால் பண்படாத மனதினாலும் மந்திரங்களில் உள்ள எழுத்துக்களின் மாத்திரைகள் கெடாமல் இருப்பதற்காகச் சந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பது இக்கதையின் கருத்து. இவ்விதமாகவே பாட்டுக்களில் உள்ள எழுத்துக்கள் இசைகள் இவைகளின் நீட்டல், குறுக்கல் முதலியவை கெடாமல் பாதுகாப்பது தாளமாகும்.

ஆகையால் தாளமானது ரிக்வேத காலம் முதல் நமது நாட்டில் இருந்து வந்திருக்கிறது. பாட்டுக்களுள் தாளக்கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட பாட்டுக்களும் உண்டு; தாளத்திற்கு உட்படாத ஆலாபனம் முதலியவைகளும் உண்டு. ஆடலும் பாடலும மனதின் உவகையினின்றும் பிறக்கின்றமையால் இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாக ஓரே காலத்தில்

பிறந்திருக்கவேண்டும். பாட்டுக்களில் சில சமயங்களில் தாளம் உபயோகப்படாமலிருந்தாலும் நர்த்தனத்திற்குத் தாளம் உயிர் போன்று அத்தியாவசியமானது. தாளத்தின் போக்கோடு அங்கங்களின் அசைவுகளை அழகாக லயிக்கச் செய்வதே நர்த்தனத்தின் சிறப்பான வழி. அதனாலேயே தாளத்திற்கு 'லயம்' என்ற மறு பெயர்உண்டாயிற்று.

நாட்டியம் என்னும் நாடகத்தின் உறுப்புக்களாக முதலில் பாட்டுக்களையும், வாத்தியங்களையும், சொல்முதலிய நால்வகை அபிநயங்களையும், ரஸபாவங்களையும் நான்கு வேதங்களினின் றும் எடுத்து நாட்டியக்கலையை ஆதியில் பிரமன் உற்பத்தி செய்து பரதமுனிக்கு உபதேசித்தார் என்றும், அக்கலையின் அதிசயமான கவர்ச்சியைக் கண்டு சிவபிரான் [1]நர்த்தனக் கலையைத் தனது சீடராகிய நந்திகேசுவரரைக்கொண்டு பரதருக்குக் கற்பித்து அதையும் நாடகத்தின் ஓர் அங்கமாகச் சேர்த்துக் கொள்ளச் செய்தார் என்றும் பரதருடைய நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தாளத்தைப் பற்றிய விரிவான நூல்கள் பரமசிவன் நந்திகேசுவரர் முதலிவர்களால் அருளப்பட்ட நூல்களிலும், அவர்கள் பரம்பரையில் சம்பிரதாயத்தை அனுசரித்துவரும் நட்டுவனார்களிடமும் விசேஷமாகக் காணப்படுகிறது. தற்காலத்தில் நந்திகேசுவரரால் எழுதப்பட்ட நூல்களுள் 'பரதார்ணவம்' என்னும் நூலின் ஒரு பகுதியைத் தவிர மற்ற நூல்கள் மறைந்து போயின. ஆனால் நாட்டிய சாஸ்திரத்தில் தாளத்தைப் பற்றிய பகுதியும், 12-வது நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத ரத்னாகரத்தின் தாள அத்தியாயமும், வாத்திய அத்தியாயமும், நாட்டியாச்சாரியர்களால் தொன்று தொட்டு மனப்பாடம் செய்யப்பட்டு வந்த ஆதிபரதம் என்னும் கட்டுரையும் நமக்குப் பெரிதும் உதவிபுரியக் கூடியவைகளாக இருக்கின்றன.

தமிழ் நாட்டில் முதற் சங்ககாலம் முதல் முத்தமிழில் கடைசி இரண்டு பகுதிகளாகிய இசைத் தமிழ், நாடகத் தமிழ்

---

1. நாட்டியம் = நடித்தல், அபிநயித்தல்; நர்த்தனம் = ஆடல்

இவற்றின் இலக்கணங்கள் அமைந்த பல நூல்கள் இருந்திருக்கின்றன. ஆனால் அவைகளெல்லாம் இப்பொழுது மறைந்து போயின. அவற்றின் பெயர்களும் அவற்றினின்றும் எடுத்துக் காட்டாகக் கையாளப்பட்ட சில மேற்கோள்கள் மட்டும் சிலப்பதிகார உரைகளில் நமக்குக் கிடைக்கின்றன. அவைகளுள் 'தாளவோத்து', 'கரணவோத்து' முதலிய நூற்பெயர்கள் முக்கியமானவை. அவ்வுரைகளில் காணப்படும் தாளத்தைப் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு :—

1. தாளக் கூறுபாடு இருவகை :—

" 'செம்முறை உறழ்பே மெய்ந்நிலை கொட்டல்' என்று சொல்லப் படா நின்ற வண்ணக் கூறுபாட்டையும் இருவகைத் தாளக் கூறுபாட்டையும்" —அரங்கேற்றுகாதை 26-வது வரி உரை.

2. தாளவகை ஒத்து என்னும் தாள நூல் :—

"இதன் பகுதியெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். வந்தவழிக் கண்டு கொள்க. அஃதன்றித் தாளவகை ஒத்தினுள்ளும் காணலாகும்.
—ஷை ஷை.

3. பாணி, தூக்கு, முடம்.

"பாணியு மென்றது—தாளங்களு மென்றவாறு, 'கொட்டு மசையுந்தூக்குமளவு மொட்டப் புணர்ப்பது பாணியாகும்"— என்றாராகலின்.

இவை மாத்திரைப் பெயர்கள்; கொட்டு அரை மாத்திரை; அதற்கு வடிவு 'க'; அசை ஒரு மாத்திரை; அதற்கு வடிவு ள; தூக்கு இரண்டு மாத்திரை; அதற்கு வடிவு உ; அளவு மூன்று மாத்திரை; அதற்கு வடிவு ஃ எனக்கொள்க.

என்னை ? 'ககரங்கொட்டே யெகரமசையே யுகரந்தூக்கே யளவேயாய்தம்' என்றாராகலின்.

இவற்றின் தொழில் வருமாறு:— கொட்டாவது— அமுக்குதல்; அசையாவது— தாக்கியெழுதல்; தூக்காவது— தாக்கித் தூக்குதல்; அளவாவது—தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதலென்க்கொள்க.

அரை மாத்திரையுடைய ஏகதாளம் முதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதிலோசன மீறாகச்சொன்ன நாற்பத்தொரு

தாளமும் புறக்கூத்திற்குரிய; ஆறன் மட்டமென்பனவும், எட்டன் மட்டமென்பனவும் தாளவொரியலென்பனவும், தனிநிலையொரிய லென்பனவும், ஒன்றன் பாணி முதலாக எண் கூத்துப் .பாணியீருகக் கிடந்த பதினேரு பாணி விகற்பங்களும், முதலிடை வார முதலாயின வும் அகக்கூத்திற்குரியவென்க.

தூக்கு மென்றது—இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு மதலைத் தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற் றூக்கு, நெடுந்தூக்கெனப்பட்ட ஏழ தூக்குக்களுமென்க; என்னை? 'ஒரு சீர் செந்தூக்கிருசீர் மதலை முச்சீர் துணிபு நாற்சீர் கோயிலைஞ்சீர் நிவப்பாமறு சீர்கழாலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனுர் புலவர்' என்ருராகலின்.'' —அரங்கேற்றுகாதை 16-வது வரி உரை.

4. இயக்கம் நான்கு:—

"முதனடை, வாரம், கூடை, திரளென்று சொல்லப்படும் இயக்க நான்கிலும் முதனடை மிகவும்தாழ்ந்த செலவினை உடைத்தாக லானும், திரள் மிக முடுகிய நடையினை உடைத்தாகலானும், இவை தவிர்ந்து இடைப்பட்ட வாரப்பாடல் சொல்லொழுக்கமும் இசை யொழுக்கமு முடைத்தாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவு முடைத்தாகலானும் சிறப்பு நோக்கி அவ்விரண்டினுள் ளும் வாரப்பாடலை அளவும் நிரம்ப நிறுத்த வல்லனையென்க; எனவே கூடைப்பாடலும் அமைவ தாயிற்று"

—அரங்கேற்றுகாதை 67-வது வரி உரை.

இப்போது நமக்குக் கிடைக்கும் வடமொழி நூல்களில் அடியிற்கண்ட விவரங்கள் காணப்படுகின்றன:—

1. நாட்டிய சாஸ்திரம் அத்தியாயம் 31:—தாளங்களின் உற்பத்தி; ஆதியில் உண்டான 5 தாளங்கள்; அவை பெருகிய வகை; தாளதசப்ராணன்களில் ப்ரஸ்தாரம் நீங்கலாக மற்றவும்; தாள கீதிகள் என்னும் உருப்படிகள்.

2. பரதார்ணவம்—108 தாளங்கள்; 32 அங்கஹாரங் களின் தாளங்கள்.

3. தத்திலம்—நாட்டிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட எல்லா விஷயங்களும்,

4. ப்ருஹத்தேசி—தாள அத்தியாயம் அகப்படவில்லை.

5. சங்கீத சமய சாரம்—ப்ரஸ்தாரம் உள்பட எல்லா விஷயங்களும் மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

6. சங்கீத ரத்னாகரம்— தாள தசப்ராணன்கள், தாள ரீதிகள், 108 தாளங்கள்.

7. ஆதிபரதம்—108 தாளங்கள், தாள தசப்ராணன்கள்.

8. சங்கீத தர்ப்பணம்—ஷெ அம்சங்கள் எல்லாம் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றன.

இனி இவைகளில் தாளத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பதைக் கூறுவோம்.

தாளங்களின் அமைப்பை விளக்குவதற்காக தாள தச ப்ராணன் என்ற 10 வகைப் பண்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளாவன :—

1. காலம் (கால அளவை)
2. மார்க்கம் (நாட்டுக்கு நாடு மாறுபடும் தாள நடை)
3. க்ரியை (காலத்தை அளக்கும் தட்டு, வீச்சு முதலியன)
4. அங்கம் (ஒவ்வொரு தாளத்தையும் தொகுக்கும் கால அளவை உறுப்புகள்)
5. க்ரஹம் (தாளத்தின் எந்த இடத்தில் பாட்டு ஆரம்பிக்கப்படுகிறதோ அந்த 'இடம்' அல்லது 'எடுப்பு'
6. ஜாதி (ஒவ்வொரு தாளத்திலும் உள்ள உள் நடை)
7. கலை (தாள அங்கங்களைப் பெருக்கிப் புதிய தாளங்கள் அமைக்கும் முறை)
8. லயம் (தாளத்தின் வேகம் அதாவது துரிதம், விளம்பம் முதலிய கதி)
9. யதி (தாளத்தின் விளம்பம், துரிதம் முதலியவைகளை அழகாக அமைக்கும் முறை)

10. பிரஸ்தாரம் (ஒரே கால அளவைக் கூடுதலுள்ள பல தாளங்களை அங்க வேறுபாடுகளால் அமைக்கும் முறை)

1. காலம் :— க்ஷணம் முதலான காலமே கொட்டு வீச்சு முதலிய செய்கைகளால் பிரிக்கப்பட்டு ஆடல், பாடல் களில் காலத்தை அளக்கும்போது காலமே தாளமாகிறது. தாளத்தில் வழங்கப்படும் கால அளவைகள் முக்கியமாக அனுத்ருதம், த்ருதம், லகு, குரு, ப்லுதம், காகபாதம் என்பவையாகும். இவை முறையே $\frac{1}{4}$ மாத்திரை, $\frac{1}{2}$ மாத்திரை, 1 மாத்திரை, 2 மாத்திரை, 3 மாத்திரை, 4 மாத்திரை அளவு கள் உள்ளதாகக் கருதப்படுகின்றன. ஆதியில் 1 மாத்திரை, 2 மாத்திரை, 3 மாத்திரை கொண்ட லகு, குரு, ப்லுதம் ஆகிய எழுத்துக்களின் மாத்திரைக்கால அளவுகளே தாளத் தின் முக்கிய அளவைகளாக ஏற்பட்டுப் பிறகு லகுவில் பாதி த்ருதம் அதில் பாதி அனுத்ருதம் என்ற கீழ் வரிசைகளும் நான்கு லகுவின் அளவு கொண்ட காகபாதம் என்னும் மேல் வரிசையும் ஏற்பட்டதாக ஊகிக்கலாம்.

2. மார்க்கம் :— மார்க்கம் என்பது நாட்டுக்கு நாடு மாறுபடும் இசை, தாளம் இவைகளின் நடை வேறுபாடுகள். அவை முக்கியமாக மூன்று வகைப்படும். அவைகளுக்கு 'விருத் திகள்' என்றும் பெயர் உண்டு. சித்திரம், வார்த்திகம், தக்ஷி ணம் என்பவை அவைகளின் பெயர். சித்திர வ்ருத்தியில் வாத்தியங்கள் குறைவாகவும் துரித கதியான லயமும், சமமான யதியும், அனாகதமான க்ரஹம் என்ற எடுப்பும் ஒரு களைச் சவுக்கமுள்ள தாளமும் அமைந்திருக்கும். வார்த்திகத்தில் பாட்டும, வாத்தியமும் ஒரே அளவாகவும், இரண்டு களைச் சவுக்கமுள்ள தாளமும், மத்யகால லயமும், சுரோதோ வகை (ஆற்றொழுக்க) யதியும், ஸமக்ரஹமும் அமைந்துள்ளது. தக்ஷிண வ்ருத்தியில் பாட்டு மிகுதியாகவும், வாத்தியங்கள் மிகக் குறைவாகவும், 4 களைச்சவுக்கமுள்ள தாளமும், விளம்பித லயமும கோபுச்சை யதியும், அதீதக்ரஹமும் அமைந்துள்ளது.

சில ஆசிரியர்கள் மார்க்கங்களை நான்கு என்று கூறி த்ருவம் என்பதை நான்காவது மார்க்கமாகச் சேர்த்து அவை

க்ஷின் மாறுபாடுகளை ஒவ்வொரு களையின் மாத்திராகாலங்களைக் கொண்டு நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்கள் கொள்கைப்படி த்ருவ மார்க்கத்தில் களைக்கு 1 மாத்திரையும், சித்திர மார்க்கத்துக்கு 2 மாத்திரைகளும், வார்த்திக மார்க்கத்துக்கு 4 மாத்திரைகளும், தக்ஷிண மார்க்கத்துக்கு 8 மாத்திரைகளும் உண்டென்று கூறுகிறார்கள். இதனோடு ஒவ்வொரு மாத்திரைக்கும் தனியான பெயரும் அதற்கான க்ரியையும் சொல்லப்பட்டிருக்கிறது. எட்டு மாத்திரையுள்ள களையை எடுத்துக்கொண்டால் முதல் மாத்திரைக்கு 'த்ருவகா' என்று பெயர். அதற்கான க்ரியை சத்தத்தோடு கூடிய த்ருவம் என்ற கை நொடித்தல். இரண்டாவது மாத்திரைக்கு 'சர்ப்பிணி' என்று பெயர். அதற்கான க்ரியை சத்தமில்லாமல் கையை இடது பக்கம் வீசுதல். மூன்றாவது மாத்திரைக்கு 'க்ருஷ்யா' என்று பெயர். அதற்கான க்ரியை வலது பக்கம் கையை வீசி இறக்குவது. நான்காவது மாத்திரைக்கு 'பத்மினீ' என்று பெயர். அதற்கான க்ரியை நேரே கீழே இறக்குவது. ஐந்தாவது மாத்திரைக்கு 'விஸர்ஜிதா' என்று பெயர். அதன் க்ரியை கையை நேரே வெளியே கொண்டு போதல். ஆறாவது மாத்திரைக்கு 'விக்ஷிப்தா' என்று பெயர். அதன் க்ரியை விரல்களை மடக்குவது. ஏழாவது மாத்திரைக்கு 'பதாகா' என்று பெயர். அதன் க்ரியை கையை உயரத்தூக்குவது. எட்டாவது மாத்திரை 'பதிதா'. அதன் க்ரியை கையைக் கீழே அமுக்குவது. த்ருவ மார்க்கத்தில் முதல் மாத்திரையாகிய 'த்ருவகாவும்' சித்திர மார்க்கத்தில் முதலாவது, எட்டாவது மாத்திரைகளாகிய த்ருவகா, பதிதாவும் வார்த்திக மார்க்கத்தில் முதலாவது, நான்காவது, ஏழாவது எட்டாவது மாத்திரைகளும் தக்ஷிண மார்க்கத்தில் 1 முதல் 8 மாத்திரைகளும் ப்ரயோகிக்கப்படவேண்டும். இவைகளுக்குத் தற்காலம் நாடகத்தில் 'தரு' என்று வழங்கப்படும் த்ருவ கானத்தில் மட்டுமேயன்றி ஏனைய உருப்படிகளுக்கு உபயோகம் சொல்லப்படவில்லை. இப்பகுதியில் மாத்திரை என்பது கண்ணிமைப்பொழுது, கை நொடிப்பொழுது அல்லது ஓர் குறில் எழுத்தின் காலமல்ல. அவ்வித

மாத்திரைகளில் ஐந்து கொண்டதே இப்பகுதியில் மாத்திரை எனப்படும்

3. க்ரியை :— க்ரியை என்பது கொட்டு, வீச்சு முதலியவைகளால் காலத்தைப் பகுப்பதாகும். இது சத்தத்தோடு கூடியது (ஸசப்த க்ரியை), சத்தமில்லாதது (நிச்சப்த க்ரியை) என இரு வகைப்படும். ஸசப்த க்ரியைகள் நான்கு. நிச்சப்த க்ரியை நான்கு. சம்யா, தாளம், சந்நிபாதம், த்ருவம் என்பவை ஸசப்த க்ரியைகள். ஆவாபம், நிஷ்கிரர்மம், விக்ஷேபம், பிரவேசம் என்பவை நிச்சப்தக்ரியைகள். உள்ளங்கையை மேல் நோக்கி விரல்களைப் பிரித்து வலது பக்கம் வீசுவது விக்ஷேபம். அவ்விரல்களை மடக்குவது ஆவாபம். உள்ளங்கை கீழ் நோக்கி விரல்களைப் பிரித்து நீட்டுவது நிஷ்கிராமம். அவ்விரல்களை மடக்குவது பிரவேசம். இதுவே நாட்டிய சாஸ்திரம், சங்கீத ரத்னாகரம், சங்கீத தர்ப்பணம் முதலிய வடமொழி நூல்களில் கண்ட லக்ஷணம். ஆனால் நமது நூலில் க்ரியைகளைப் பற்றிய குறிப்புகள் சிறிது மாறுபட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் நாட்டிய சாஸ்திரம், சங்கீத ரத்னாகரம் முதலிய நூல்களில் உள்ள குறிப்புகள் இரண்டு கைகளாலும் போடப்படும் தாள க்ரியைகளைக் குறிக்கின்றன. இந்த நூலில் உள்ள குறிப்புகள் கைத்தாளம் என்னும் வெண்கலத்தாலாகிய கனவாத்தியத்தை வைத்துக் கொண்டு போடப்படும் விதங்களைக் குறிக்கிறது. இதன் விவரம் சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்ட 'பரத சங்கிரஹம்' என்னும் நூலில் காணப்படுகிறது.[1]

4. அங்கம் :— அங்கங்கள் என்பது தாளங்களைத் தொகுக்கும் கால அளவைகளுக்குப் பெயர். ஏற்கெனவே

---

1. பரத சங்கிரஹம் 85-ம் பக்கம் 225-வது செய்யுள் உரைப் பகுதி பின்வருமாறு :—

'கபித்தக்கையுங் கடகக்கையுமாகப்பிடித்த இரண்டு கஞ்ச தாளத்துக்கு க்ரியையாக ஏழியற்றுண்டு. அவையாவன :— ஆவாபம், நிட்கிராமம், விக்கேபம், பிரவேசம், சம்மியம், தாளம், சந்நிபாதமென ஏழியிற்றும்.

சொல்லியபடி ஆதிகாலத்தில் எழுத்துக்களின் மாத்திரைகளும் பெயர்களும் கால அளவைகளாக ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அதாவது ஆதியில் ஏற்பட்ட அங்கங்கள் 1 மாத்திரையுள்ள லகு, 2 மாத்திரையுள்ள குரு, மூன்று மாத்திரையுள்ள ப்லுதம் என்பவையேயாம். பிறகு 4 மாத்திரையுள்ள காகபாதமும் $\frac{1}{2}$ மாத்திரையுள்ள த்ருதமும், $\frac{1}{4}$ மாத்திரையுள்ள அனுத்ருதமும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளே தாளங்களின் அங்கங்களாக அமைந்திருக்கின்றன. ஆனால் லகுவின் மாத்திரா காலம் 1 மாத்திரை என்ற கட்டுப்பாடு இல்லாமல் 1 முதல் 8 மாத்திரை வரையில் அதிகப்படுத்தப்பட்டுப் பல பிரதேசங்களில் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

ஆதியில் உபதேசிக்கப்பட்ட மார்க்க சங்கீதத்தில் லகுவுக்கு 5 மாத்திரைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அங்கங்களில் த்ருதத்துக்குப் பிறகும் லகுவுக்குப் பிறகும் 'விராமம்' என்ற க்ரியையில்லாத ஓர் அங்கம் சேர்க்கப்படும் சம்பிரதாயம் உள்ளது. விராமம் என்றால் நிறுத்துதல் அல்லது முடித்தல் என்று பொருள். அதன் கால அளவை பொதுவாக எந்த அங்கத்தின் பின்வருகிறதோ அந்த அங்கத்தின் அரைவாசி என்று கருதலாம். அந்தக் கால அளவையின் கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்தியும் பிரயோகம் செய்யலாம் என்பது சம்பிரதாயம். அது பற்றியே விராமமானது 'முழு முதற் கடவுளாகிய பரமசிவனைப்போல் உருவமும், க்ரியையும், கால அளவையும், கட்டுப்பாடும் அற்ற சுதந்திரமுடையது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.[2] இந்தநூலில் 25-வது செய்யுள் விராமம் நிற்கும் நிலையை விளக்குகிறது.

ஒத்துக்கிரியை :— தாளம் போடும் போது அங்கங்களை விவரமாகக் காட்டுவதற்காக 'ஒத்துக்ரியை' என்னும் சம்பிரதாயம் இந்த நூலில் 28, 29, 30-வது செய்யுட்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த விவரம் வடமொழி நூல்களில் காணப்படவில்லை.

2. சங்கீத தர்ப்பணம் சு. 761 முதல் 764 வரையில் பார்க்க.

5. க்ரஹம்:— க்ரஹம் என்பது தாளத்தின் எந்த இடத்தில் பாட்டு ஆரம்பிக்கப்படுகிறதோ அந்த இடம் அல்லது எடுப்புக்குப் பெயர். இது நான்கு வகைப் படும். இவை நான்குக்கும் சமம், அதீதம், அனுகதம், விஷமம் என்றும்; தாளம், விதாளம், அனுதாளம், பிரதிதாளம் என்றும்; சமபாணி, அவபாணி, உபரிபாணி, விஷமபாணி என்றும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன.

6. ஜாதி:— ஜாதி என்பது தாளங்களின் உள் நடையைக் குறிக்கும். சதுரச்ரம், திரியச்ரம் என்பவையே பிரதானமான நடையாகும். அவ்விரண்டு நடையில் ஆதியில் அமைக்கப்பட்ட தாளங்கள் சச்சத்புடம், சாசபுடம் என்பவையே. இதில் சச்சத்புடம் என்ற தாளத்தின் அங்கங்கள் 2 2 1 3 என்ற மாத்திரைகளோடு கூடிய குரு, குரு, லகு, ப்லுதம் இவைகள் கொண்டது. இதில் சதுரச்ர நடையின் வகைகள் இரண்டு சேர்ந்திருப்பது வெளிப்படை. முதலாவது இரண்டும் இரண்டும் சேர்ந்த நடை. இரண்டாவது 1-ம் 3-ம் சேர்ந்த நடை. முதல் நடை கம்பீரமாகவும், இரண்டாவது நடை சிறிது மிடுக்காகவும் இருப்பதும் கவனிக்கத்தக்கது. இதைப் போலவே சாசபுடத்தில் 2 1 1 2 என்ற மாத்திரைகளுள்ள குரு, லகு, லகு, குரு என்ற அங்கங்கள் அமைந்திருக்கின்றன. அதிலும் இரண்டு திரியச்ர நடைகள் அடங்கியிருக்கின்றன. குரு, லகு கொண்ட முதலாவது நடை சிறிது மெதுவாக இருக்கிறது. லகு, குரு கொண்ட இரண்டாவது நடை அதிக மிடுக்காக இருக்கிறது. இவ்விரு ஜாதிகளே எல்லாத் தாளங்களிலும் அமைந்திருக்கும் உள்நடையாகும்.

சிவபெருமான் ஆடிய நர்த்தனத்தை முப்பத்திரெண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தாளத்தில் அமைந்தது. அவைகளுக்கு அங்கஹாரங்கள் என்று பெயர். அவைகள் பலவகைத் தாளங்களில் ஏற்பட்டிருந்த போதிலும் அவைகளை சதுரச்ர நடையிலுள்ளவை 16, திரியச்ர நடையிலுள்ளவை 16 என்று இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

இவ்விதமாக ஆதியில் இரண்டு ஜாதிகளே இருந்தன. பிறகு சதுரச்சிரம், திரியச்சிரம் என்ற இரண்டு நடைகளிலும் உள்ள நான்கையும் மூன்றையும் சேர்த்து எவ்வேழாக ஓர் நடை உண்டாக்கப்பட்டது. இரண்டு நடைகளைச் சேர்த்து உண்டாக்கப்பட்டதால் அதற்கு 'மிச்ரஜாதி' அல்லது 'கலப்பு நடை' என்று பெயரிடப்பட்டது. பிறகு பலவகைக் கலப்புள்ள நடைகளும் ஏற்பட்டன. அதற்கு 'சங்கீர்ணஜாதி' அல்லது 'பலவகைக் கலப்புள்ள நடை' என்ற பெயர் கொடுக்கப் பட்டது. பிற்காலத்தில் சதுரச்சிரத்தில் பாதியையும், திரியச் சிரத்தையும் சேர்த்து ஐந்தைந்தான நடை ஏற்பட்டபோது அதற்கு 'கண்ட ஜாதி' அல்லது 'துண்டிக்கப்பட்ட பகுதிகள் சேர்ந்த நடை' என்ற பெயர் உண்டாயிற்று. அப்பொழுது சங்கீர்ணம் என்ற பெயரை ஒன்பதோன்பதான நடையுள்ள ஜாதிக்கே உரித்தானதாக வழங்கப்பட்டது. இவ்விதமாக முத லில் இரண்டாக இருந்த ஜாதிகள் 5 ஜாதிகளாக விஸ்தரிக்கப் பட்டன. ஆனல் தற்காலத்தில் ஜாதி என்னும் பெயரை களை களின் எண்ணிக்கையைக் குறிப்பதற்கும் உபயோகப்படுத் துகிறார்கள். இதன் வரலாறு களையைப் பற்றிய விவரத்தில் சொல்லப்படும்.

7. களை :— களை என்பது தாளங்களின் அங்கங்களை ஒரே வகையாகப் பெருக்கிப் புதிய தாளங்களை உண்டு பண்ணும் முறை. 'கலா' என்னும் சொல்லுக்கு ஒரு பகுதி அல்லது பாகம் என்று பொருள். தாளத்தில் 'கலா' என்னும் சொல் 'விருத்தி செய்யப்பட்ட அங்கத்தின் பகுதி' என்ற பொருளில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆதியில் களை என்ற சொல் க்ஷணம், லவம், நிமிடம், துடி, களை, காஷ்டை, லகு, குரு. ப்லுதம், என்ற கால அளவைகளின் வரிசைகளில் ஒன்றாக இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| க்ஷணம் | 8 | கொண்டது | லவம் |
| லவம் | 8 | ,, | காஷ்டை |

| | | | |
|---|---|---|---|
| காஷ்டை | 8 | கொண்டது | நிமிடம் |
| நிமிடம் | 8 | ,, | கலை |
| கலை | 2 | ,, | துடி அல்லது அணு அல்லது அனுத்ருதம். |
| துடி | 2 | ,, | த்ருதம் |
| த்ருதம் | 2 | ,, | லகு |
| லகு | 2 | ,, | குரு |
| லகு | 3 | ,, | ப்லுதம் |

இதுவே உலக வழக்கிலுள்ள கால அளவை. சங்கீதத்தில் தாள இயலில் அடியிற்கண்டபடி கால அளவைகள் பரத முனிவரால் சொல்லப்பட்டிருக்கிறது.

5 நிமேஷம் அல்லது கண்ணிமைப்பு நேரம் கொண்டது 1 மாத்திரை

2 மாத்திரை கொண்டது 1 கலை

ஒரே மாத்திரையுள்ள கலையும் உண்டு.

இப்படிக் கால அளவையாக இருந்த 'கலை' என்னும் சொல் பிறகு தாளத்தின் அங்கங்களைப் பல மடங்குகளாகச் செய்து புதிய தாளங்களை உண்டாக்குவதற்கான முறைக்குப் பெயராக ஏற்பட்டுவிட்டது.

ஒவ்வொரு தாளத்திலும் அதற்கேற்பட்ட அங்கங்களை அப்படியே வைத்துக் கொள்வதற்கு 'ஏககளா' அல்லது 'ஒரு கலைத்தாளம்' என்று பெயர். ஒவ்வொரு அங்கத்தையும் இரு முறை பிரயோகம் செய்வதற்கு 'த்விகளா' அல்லது 'இருகலைத் தாளம்' என்று பெயர். 4 முறை ப்ரயோகம் செய்வதற்கு 'சதுஷ்களா' அல்லது 'நாலு கலைத்தாளம்' என்று பெயர். இம் மூன்றுமே ஆதியில் ஏற்பட்ட கலை வகைகள்.

பிறகு சதுரச்ச்ரமான சச்சபுடத்திற்கு 8 கலை, 16 கலை என்பதையும் திரியச்ச்ரமாகிய சாசபுடம் முதலிய மற்ற தாளங்களுக்கு 3 கலை, 6 கலை, 12 கலை, 24 கலை, 48 கலை, 96 கலை என்ற கலைவகைகளையும் சேர்த்துக் கொண்டனர். இவைகளே மார்க்க தாளங்கள் என்ற ஆதியில் ஏற்பட்ட தாளங்கள்,

அங்கங்களைப் பலவகையாக உபயோகப்படுத்தி முக்கிய மாக நர்த்தனத்திற்காகக் கற்பனை செய்யப்பட்ட தாளங்களே 108 தாளங்கள் என்பன. இந்த 108 தாளங்களின் விவரம் பரதருடைய 'நாட்டிய சாஸ்திரத்தில்' காணப்படவில்லை. பரம சிவனால் பார்வதி தேவிக்கு உபதேசிக்கப்பட்டதாகச் சொல்லப் பட்ட 'ஆதிபாதம்' என்ற நூலிலும் நந்திகேசுவரரால் எழுதப் பட்ட 'பரதார்ணவம்' என்னும் நூலிலும் இவை காணப்படு கின்றன. இதற்குக் காரணம் 'நாட்டிய சாஸ்திரம்' அபிநயத் தைப் பிரதானமாகக்கொண்ட நாடக இயலுக்கே உரித்தானது. பரமசிவன், நந்திகேசுவரர் இவர்களால் ஏற்பட்ட நூல்கள் நர்த்தனத்திற்கே உரித்தானது.

ஆனால் தற்காலத்தில் 108 தாளங்களைப் போடும் வழியும் 'களை' என்ற சொல்லுக்கான சரியான பொருளும் மறைந்து போய்விட்டன. இப்பொழுது வழக்கத்திலுள்ள தாளங்கள் தென்னாட்டில் 108 தாளங்களுள் 7 தாளங்களும், சில தனிப் பெயர் கொண்ட தாளங்களுமேயாகும். மற்ற தாளங்களெல் லாம் ஆதியில் ஏற்பட்ட ஐந்து தாளங்கள் உட்பட இப்போது பழக்கத்தில் அற்றுப்போய்விட்டன. ஆராய்ச்சியளவில் இருந்து வருகின்றன.

தாளங்கள் மிகவும் குறைவாகப் போய் விட்டபடியால் அவைகளைக் களைப் பெருக்கத்தினால் விருத்தி செய்ய ஆரம்பித் ததில் முதலில் 4 களைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இதிலுள்ள சௌகரியம் என்னவென்றால் லகுவுக்கு 4 களை அல்லது 4 மாத்திரை ஏற்படுத்தினால் அதில் பாதியான திருதத்துக்கு 2 மாத்திரையும், அதிலும் பாதியான அனுத்ரு தத்திற்கு 1 மாத்திரையும் வைத்துக் கொள்வது சுலபமாக இருந்தது. ஆனால் இது மட்டும் ப்ரயோகத்திற்குப் போத வில்லை. 3 களை, 5 களை, 7 களை, 9 களைகளிலும் தாளங்களை அமைக்கலாயினர். இப்பொழுதுதான், 'களை' என்ற சொல்லின் பொருளில் ஜாதி என்ற சொல்லை உபயோகிக்க ஆரம்பித்த தாகத் தெரிகிறது. 2 களை, 4 களை, 8 களை என்று பெருக்கிக்

கொண்டு போகாமல் தாளத்தின் உள்நடைக்காக ஏற்பட்ட திரியச்சிரம், சதுரச்சிரம், கண்டம், மிச்ரம், சங்கீர்ணம் என்ற ஜாதிகளின் பெயர்களை களைகளுக்கு உபயோகப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். இப்படி 3 களை, 5 களை, 7 களை, 9 களைகளையுடைய தாளங்களை திரியச்ர ஜாதி, கண்ட ஜாதி, மிச்ர ஜாதி, ஸங்கீர்ண ஜாதி, என்று பெயரிட்டு விட்டனர். தாளங்களின் உள்நடைப் பெயர் களைகளுக்குப் பெயராயிற்று. இவை களை ஏற்படுத்துவதிலும் ஒரு சங்கடம் ஏற்பட்டது. 5 களைச் சவுக்கத்தில் லகு ஏற்பட்டால் த்ருதத்திற்கு $2\frac{1}{2}$ மாத்திரை அளவு ஏற்படுத்த வேண்டியிருந்தது. இதற்காக முழு மாத்திரையாக வரக்கூடிய ஓர் ஏற்பாடு அவசியமாயிருந்தது. அது யுக்திக்குப் பொருத்தமில்லையாயினும் இப்பொழுது நடைமுறையில் அனுபவத்திற்கு வந்துவிட்டது. அதாவது 3 களை, 5 களை 7 களை, 9 களைகளில் லகு இருந்தாலும் த்ருதம், அனுத்ருதம் இவைகளின் மாத்திரா காலம் லகுவுக்கு 4 மாத்திரை என்ற கணக்கிலேயே அமைக்கப்பட்டது. களை என்ற பெயரோடு ஜாதி என்ற பெயரையும் ஒரே பொருளில் வழங்க ஆரம்பித்து விட்டார்கள்.

8. லயம் :— லயம் என்பது தாளத்தின் வேகத்தைக் குறிக்கும். அவற்றையே நாம் இப்பொழுது விளம்ப காலம், மத்ய காலம், துரித காலம் என்கிறோம். முதற்காலம், இரண்டாம் காலம், 3-ம் காலம் என்றும் அழைக்கிறோம். தமிழ் நூல்களில் 'முதனடை', 'வாரம்', 'கூடை', 'திரள்' என்ற நான்குவித லயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஷட்கால கோவிந்தமாரர் என்ற ஒரு பிரபல சங்கீத வித்வான் ஸ்ரீ தியாகய்யர் காலத்தில் இருந்ததாகவும் அவர் 6 காலம் பாடும் அப்பியாசம் உள்ளவர் என்று சொல்லுகிறார்கள்.

9. யதி :—யதி என்பது பலவித லயங்களை அழகாகத் தொகுக்கும் முறை. ஆதியில் சமம், சுரோதோவகை, கோபுச்சை என்ற மூன்று வகை யதிகளே ஏற்பட்டிருந்தன. சில நூல்களில் 'மிருதங்க யதி', 'பிபீலகை யதி' முதலிய வேறு சில யதிகளும் சொல்லப்படுகின்றன.

10. பிரஸ்தாரம் :— பிரஸ்தாரம் என்பது ஒரே கால அளவுள்ள தாளத்தைப் பலவித அங்கங்களாக்க் கற்பனை செய்யும் முறை. இப்படிக் கற்பனை செய்யும்போது ஒரே வகையான கற்பனை இரட்டிக்காமலிருப்பதற்கும், செய்யக் கூடிய கற்பனைகளில் ஒன்றும் விட்டுப் போகாமலிருப்பதற்காகவும் கற்பனை செய்வதில் ஓர் முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கே பிரஸ்தாரக்கிரமம் என்று பெயர்.

பிரஸ்தாரத்தின் எண்ணிக்கைகளின் சம்பந்தமாகச் சில குறுக்கு வழிக் கணக்கு முறைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் பெயர் வருமாறு :—

1. பிரஸ்தாரம், 2. சங்கியை, 3. நஷ்டம், 4. உத்திஷ்டம், 5. பாதாளம், 6. த்ருதமேரு, 7. லகுமேரு, 8. குருமேரு, 9. ப்லுதமேரு, 10. சம்யோகமேரு, 11. கண்டப்ரஸ்தாரம், 12. இவைகளின் நஷ்ட, உத்திஷ்டம் என்பவையாம்.

இவற்றுள் ப்ரஸ்தாரம், சங்கியை, நஷ்டம், இவை மூன்றும் இந்த நூலின் பக்கம் 20 முதல் 27 வரையில் உள்ள அடிக்குறிப்புகளில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மற்றவை இதனடியில் சொல்லப்படுகின்றன.

உத்திஷ்டம் :— இந்த உருவமுள்ள ப்ரஸ்தாரம் எத்தனையாவது என்பதே உத்திஷ்டம். இதைக் கண்டுபிடிப்பதற்கு முதலில் நஷ்டத்தைக் கண்டுபிடிப்பதற்குச் செய்தது போல் சங்கியையை எழுதிக்கொள்ள வேண்டும். நஷ்டத்தில் கழிபடாத எண்களால் த்ருதங்களும், கழிபட்ட எண்களால் லகு, குரு ப்லுதம் முதலியவைகளும் கிடைத்துக் கடைசியில் மிச்சமில்லாமல் போகிறபடியால் அதற்கு நேர்மாறான வழியில் ப்ரஸ்தாரத்தின் எண்ணிக்கையைக் கண்டுபிடிக்கலாம். அதாவது த்ருதங்களைக் கொடுக்கும் எண்களை விட்டுவிட்டு லகு முதலியவைகளைக் கொடுக்கும் எண்களைக் கூட்டி மொத்த சங்கியையினின்றும் கழித்தால் நமக்கு ப்ரஸ்தாரத்தின் எண்ணிக்கை கிடைத்துவிடும். உதாரணமாக ப்லுதப்பிரஸ்தாரத்தில் 1 1 0 0 என்ற உருவமுள்ள ப்ரஸ்தாரத்தின் வரிசை எண் என்ன என்ற கேள்வியை

எடுத்துக்கொள்வோம். முதலில் சங்கியையை எழுதிக்கொள்வோம்;

1, 2, 3, 6, 10, 19.

இதில் நமது பிரஸ்தாரத்தில் முதலில் இரண்டு த்ருதங்கள் இருப்பதால் கடைசி எண்ணுக்கு முந்திய பத்தும், ஆறும் ஆகிய இரண்டு எண்கள் நஷ்டத்தில் கழிபடாதவைகள். ஆகையால் அவற்றை விட்டுவிட வேண்டும். அடுத்தபடி லகு இருக்கிறது. அது கழிபட்ட எண்ணினால் கிடைத்திருக்கவேண்டும். ஆகையால் '3' ஐ எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கடுத்தாற்போல் ஒரு லகு இருக்கிறது. ஆதலால் இடையில் கழிபடாத எண் இருந்திருக்கவேண்டும். அடுத்தடுத்துக் கழிபட்டிருந்தால் குருவாகியிருக்கும். ஆகையால் '2' என்ற எண்ணையும் விட்டுவிட்டு அடுத்த எண்ணாகிய '1' ஐ எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது எடுத்துக் கொண்ட எண்கள் '3' ம் '1' ம். இவைகளைக் கூட்டி மொத்த சங்கியையினின்றும் கழிக்க 15 கிடைக்கிறது. இதுவே இந்த ப்ரஸ்தாரத்தின் எண் வரிசை.

மற்றொரு உதாரணம்:—

ப்லுதப்பிரஸ்தாரத்தில் I O O I என்ற உருவமுள்ள ப்ரஸ்தாரத்தின் எண் வரிசையைக் கண்டுபிடிப்போம். முதலில் லகு; அதனால் '10'ஐ எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு இரண்டு த்ருதங்கள் வருவதால் 6, 3, 2 இவைகளை விட்டுவிடவேண்டும். ஏனெனில் லகுவைக் கொடுக்கும் ஓர் எண்ணுக்கு அடுத்தாற்போல் வருகிற கழிபடாத எண்ணிலிருந்து த்ருதம் கிடைக்காது. ஆகையால் '6' ஐ நீக்கிப் பிந்திய இரண்டு எண்களையும் த்ருதத்தைக் கொடுக்கும் கழிபடாத எண்களாக விட்டுவிட வேண்டும். அடுத்ததாக ஒரு லகு இருப்பதால் கழிபடும் '1' ஐயும் எடுத்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது எடுத்துக் கொண்ட 10 ஐயும் 1 ஐயும் கூட்டி 19 லிருந்து கழிக்க 8 கிடைக்கிறது. அதுவே ப்ரஸ்தாரத்தின் எண் வரிசை.

பாதாளம்:— பாதாளம் என்பது ஓர் தாளத்தின் எல்லா ப்ரஸ்தாரங்களிலும் எத்தனை த்ருதம், எத்தனை லகு, எத்தனை

குரு, எத்தனை ப்லுதம் இருக்கின்றது என்பதைக் காட்டும் அட்டவணை. இதற்கு முதல் வரியில் தாளத்திற்கான சங்கியை வரிசையை எழுதிக் கொள்ளவும். இரண்டாவது வரியில் முதவில் இரண்டு எண்களை 1, 2 என்று எழுதிக்கொண்டு மூன்றாவது முதல் அந்திய, உபாந்திய, சதுர்த்த, ஷஷ்ட என்ற இடங்களிலுள்ள எண்களைக் கூட்டி அந்தியத்திற்கு மேலேயுள்ள எண்ணையும் கூட்டிக் கொண்டு எழுதிக் கொண்டு போகவும். இதில் சங்கியைக்குச் சொன்னது போல் சதுர்த்தம் இல்லாவிட்டால் த்ருதீயமும், ஷஷ்டம் இல்லாவிட்டால் பஞ்சமமும் சேர்த்துக்கொள்ளக் கூடாது. எண் வரிசை கிடைத்த விவரம் வருமாறு:—

தாளத்திலுள்ள த்ருதங்கள்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சங்கியை | 1 | 2 | 3 | 6 | 10 | 19 | 33 | 60 | 106 | 191 |
| பாதாளம் | 1 | 2 | 5 | 10 | 22 | 44 | 91 | 180 | 358 | 698 |

முதல் இரண்டு எண்களும் 1, 2.

| | | அந்தியம் | + | உபாந்தியம் | + | சதுர்த்தம் | + | ஷஷ்டம் | + | அந்தியத்திற்கு மேலுள்ள | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3-வது | = | 2 | + | 1 | + | இல்லை | | | + | 2 | = | 5 |
| 4-வது | = | 5 | + | 2 | + | ,, | | | + | 3 | = | 10 |
| 5-வது | = | 10 | + | 5 | + | 1 | + | இல்லை | + | 6 | = | 22 |
| 6-வது | = | 22 | + | 10 | + | 2 | + | இல்லை | + | 10 | = | 44 |
| 7-வது | = | 44 | + | 22 | + | 5 | + | 1 | + | 19 | = | 91 |

இந்த அட்டவணையில் அந்திய, உபாந்திய, சதுர்த்த ஷஷ்ட எண்களைக் கொண்டு ப்ரஸ்தாரங்களில் உள்ள மொத்த த்ருதம் முதலியவைகளைக் கண்டுபிடிக்கலாம். அதற்கு ஓர் உதாரணம்: 6 த்ருதகால அளவுள்ள ஓர் தாளத்தை எடுத்துக் கொள்வோம். அதன் பாதாள எண்கள், 1, 2, 5, 10, 22, 44,

இவைகளுள் அந்தியமாகிய 44, ப்ரஸ்தாரங்களிலுள்ள மொத்த த்ருதங்கள், உபாந்தியமாகிய 22, மொத்த லகுக்களின் எண்ணிக்கை, சதுர்த்தமாகிய 5, மொத்த குருக்களின் எண்ணிக்கை, ஷஷ்டமாகிய 1 மொத்த ப்லுதங்களின் எண்ணிக்கை இவைகளைக் குறிக்கும். இவ்வாறு கண்டுகொள்க.

த்ருதமேரு:— த்ருதமேரு என்பது தாளப் பிரஸ்தாரங்களில் த்ருதமில்லாத பிரஸ்தாரங்கள், 1, 2, 3, 4 முதலிய த்ருதங்கள் உள்ள பிரஸ்தாரங்கள், இவைகளின் தொகையைக் காட்டும் அட்டவணை. இந்த அட்டவணையில், ஒற்றைப்படை த்ருதங்களாலாகிய கூடுதல் கால அளவையுள்ள தாள ப்ரஸ்தாரங்களில் ஒரு த்ருதமுள்ள பேதங்கள், 3 த்ருதங்களுள்ள பேதங்கள், 5 த்ருதங்களுள்ள பேதங்கள் முதலிய ஒற்றைப்படை த்ருதங்களுள்ள பேதங்களின் எண்ணிக்கைகளையும் இரட்டைப் படை த்ருதங்களாலாகிய தாள ப்ரஸ்தாரத்தில் த்ருதமேயில்லாத பேதங்கள், இரண்டு த்ருதங்களுள்ள பேதங்கள், நான்கு த்ருதங்களுள்ள பேதங்கள் முதலிய இரட்டைப் படை த்ருதங்கள் உள்ள பேதங்களின் எண்ணிக்கைகளையும் கண்டுபிடிப்பதற்கான வரிசைகள் அமைந்திருக்கும். இதை அமைக்கும் முறை வருமாறு:—

இதற்குக் கீழிருந்து வரவரக் குறைந்த கட்ட வரிசைகள் அமைக்கவேண்டும். கீழே முதல் வரிசையில் நமக்கு வேண்டிய த்ருதங்களின் எண்ணிக்கையுள்ள கட்டங்களை அமைக்கவேண்டும். அதற்கு மேலே இடது பக்கத்தில் ஓர் கட்டத்தைக் குறைத்து பாக்கிக்கட்டங்களை வரிசையாக அமைக்கவேண்டும். அதற்கு மேலே அதே இடது பக்கத்தில் இன்னும் இரண்டு கட்டங்கள் குறைக்க வேண்டும். இப்படியே இரண்டிரண்டு கட்டங்களாகக் குறைத்துக் கொண்டு கடைசியில் இரண்டு அல்லது ஒரு கட்டமுள்ள வரிசையில் நிறுத்த வேண்டும். எல்லாவற்றிற்கும் அடியில் த்ருதங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதற்காக இடது பக்கத்திலிருந்து 1, 2, 3 என்று எண்களைக் குறித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது அடியிற்கண்டபடி கட்டங்கள் அமையும் —

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | 1 |
| | | | | | 1 | 1 | 7 | 8 |
| | | | 1 | 1 | 5 | 6 | 20 | 27 |
| | 1 | 1 | 3 | 4 | 9 | 14 | 25 | 44 |
| 1 | 1 | 2 | 2 | 5 | 4 | 12 | 7 | 26 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

இவைகளில் எண்கள் அடைப்பது எப்படியெனில், ஒவ்வொரு வரிசையிலும் இடது கைப்பக்கத்திலிருந்து முதல் இரண்டு கட்டங்களிலும் 1, 1 என்று எழுதிக்கொள்ள வேண்டும். பிறகு கீழிருந்து முதல் வரிசையில் ஒற்றைப்படை வரிசைக் கட்டங்களில் அந்தியம், உபாந்தியம், சதுர்த்தம், ஷஷ்டம் இவைளின் கூடுதலை எடுத்து எழுத வேண்டும். சதுர்த்த ஷஷ்டங்கள் இல்லாத இடத்தில் த்ருதீய பஞ்சமங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இரட்டைப்படை வரிசைக் கட்டங்களில் அந்தியத்தை விட்டு விட்டு மற்றவைகளைக் கூட்டி எழுத வேண்டும். அப்பொழுது மூன்றாவது கட்டத்திற்கு (ஒற்றைப்படை) அந்தியம் 1+உபாந்தியம் 1=2. நான்காவது கட்டத்திற்கு (இரட்டைப் படை) அந்தியமாகிய 2ஐ நீக்கி உபாந்தியம் 1 + சதுர்த்தம் இல்லாததால் த்ருதீயம் 1 = 2. ஐந்தாவது கட்டத்திற்கு அந்தியம் 2+உபாந்தியம் 2+சதுர்த்தம் 1=5. ஆறாவது கட்டத்திற்கு அந்தியத்தை நீக்கி உபாந்தியம் 2+சதுர்த்தம் 1+ஷஷ்டம் இல்லாததால் பஞ்சமம் 1=4. இவ்விதம் எண்களை எழுதிக் கொள்ள வேண்டும். அதற்கு மேலே உள்ள வரிசைகளில் இரட்டைப்படை வரிசைக் கட்டங்களில் அதே வரிசையிலுள்ள அந்தியம், உபாந்தியம், சதுர்த்தம், ஷஷ்டம் இவைகளையும், ஒற்றைப்படை வரிசைக் கட்டங்களில் அந்தியத்தை அதன் கீழ் வரிசையிலிருந்தும் உபாந்தியம், சதுர்த்தம், ஷஷ்டம் இவைகளை அதே வரிசையிலிருந்

-தும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது கீழிருந்து இரண்டாவது வரிசையில் மூன்றாவது கட்டத்தில் அதே வரிசையிலுள்ள உபாந்தியம் 1+கீழ் வரிசையிலுள்ள அந்தியம் 2=3. நான்காவது கட்டத்தில் அதே வரிசையிலுள்ள அந்தியம் 3+உபாந்தியம் 1=4. இதில் சதுர்த்த ஷஷ்டத்திற்குப் பதிலாக த்ருதீய பஞ்சமங்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்பதைக் கவனிக்கவும். ஐந்தாவது கட்டத்தில் அதே வரிசை உபாந்தியம் 3 + சதுர்த்தம் 1 + கீழ் வரிசை அந்தியம் 5=9. ஆறாவது கட்டத்தில் அதே வரிசை அந்தியம் 9+உபாந்தியம் 4+சதுர்த்தம் 1=14. 7வது கட்டத்தில் அதே வரிசை உபாந்தியம் 9+சதுர்த்தம் 3+ஷஷ்டம் 1+கீழ் வரிசை அந்தியம் 12=25. 8வது கட்டத்தில் அதே வரிசை அந்தியம் 25+உபாந்தியம் 14+சதுர்த்தம் 4+ஷஷ்டம் 1=44 இவ்வாறாகவே மற்ற கட்டங்களையும் பூர்த்தி செய்து கொள்ளலாம். இந்த த்ருத மேருவில் ஒன்பது த்ருதங்களுள்ள தாளங்களின் பிரஸ்தாரங்களில் ஒரு த்ருதமுள்ள பேதங்கள் கீழ் வரிசையிலுள்ள 26, மூன்று த்ருதங்களுள்ள பேதங்கள் அதற்கு மேலுள்ள 44. அதற்கு மேலுள்ள 27 ஐந்து த்ருதங்களுள்ள பேதங்கள். அதற்கு மேலுள்ள 8 ஏழு த்ருதங்களுள்ள பேதங்கள். அதற்கு மேலுள்ள 1 ஒன்பது த்ருதங்களுள்ள பேதங்கள். இவைகள் எல்லாவற்றையும் கூட்டி வருகிற 106, பிரஸ்தாரத்தின் மொத்த பேதங்களைக் கொடுக்கும். 8 த்ருத கால அளவையுடைய தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் த்ருதமில்லாத பேதங்கள் கீழ் வரிசையிலுள்ள 7. இரண்டு த்ருதங்களுள்ள பேதங்கள் அதற்கு மேலுள்ள 25. நான்கு த்ருதங்களுள்ள பேதங்கள் அதற்கு மேலுள்ள 20. ஆறு த்ருதங்களுள்ள பேதங்கள் அதற்கு மேலுள்ள 7. எட்டு த்ருதங்களுள்ள பேதங்கள் அதற்கு மேலுள்ள 1. இவைகளைக் கூட்டி வந்த 60, ப்ரஸ்தாரங்களின் மொத்த பேதங்களைக் கொடுக்கும். இதே விதமாக மற்ற 7, 6, 5, 4, 3, 2 த்ருத கால அளவைகளுள்ள தாள ப்ரஸ்தாரத்தின் பேதங்களைக் கண்டுகொள்க.

## லகு மேரு

லகு மேரு என்ற அட்டவணையால் குறிப்பிட்ட கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் லகுவில்லாத ப்ரஸ்தாரங்களின் தொகையையும், ஒரு லகு, இரண்டு லகுக்கள் முதலியவையுள்ள ப்ரஸ்தாரங்களின் தொகைகளையும் கண்டு கொள்ளலாம். அதை அமைக்கும் முறையாவது :—

த்ருத மேருவுக்கு அமைத்ததுபோல் கட்டங்கள் அமைத்துக் கொள்ளவும். அவைகளில் இலக்கங்கள் அமைக்கும் முறை :—

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 1 |
| | | | | | | | 1 | 5 | 15 |
| | | | | | 1 | 4 | 10 | 20 | 39 |
| | | | 1 | 3 | 6 | 10 | 18 | 33 | 61 |
| | 1 | 2 | 3 | 4 | 7 | 12 | 21 | 34 | 54 |
| 1 | 1 | 1 | 2 | 3 | 5 | 7 | 10 | 14 | 21 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஒவ்வொரு வரிசையிலும் முதல் கட்டத்தில் '1' என்ற இலக்கத்தை எழுதவும். கீழ் வரிசையில் உள்ள கட்டங்களில் அந்திய, சதுர்த்த, ஷஷ்டங்களின் கூடுதலை எழுதவும். சதுர்த்தம் இல்லாத இடத்தில் த்ருதீயத்தையும், ஷஷ்டம் இல்லாத இடத்தில் பஞ்சமமும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மற்ற கட்ட வரிசைகளில் இம்மூன்றோடு அதற்குக் கீழ் வரிசையிலுள்ள உபாந்தியத்தையும் சேர்த்துக்கொண்டு எழுதவேண்டும். இதில் சதுர்த்தத்திற்குப் பதிலாக த்ருதீயமும், ஷஷ்டத்திற்குப் பதிலாக பஞ்சமத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போது கீழ் வரிசை 3வது கட்டத்தில் அந்தியம் மட்டில்=1.

4வது கட்டத்தில் அந்தியம் 1 + த்ருதீயம் 1 = 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5வது கட்டத்தில் | அந்தியம் | 2 + | சதுர்த்தம் | 1=3 | |
| 6வது | ,, | 3 + | ,, | 1+பஞ்சமம் | 1=5 |
| 7வது | ,, | 5 + | ,, | 1+ஷஷ்டம் | 1=7 |
| 8வது | ,, | 7 + | ,, | 2+ ,, | 1=10 |
| 9வது | ,, | 10 + | ,, | 3+ ,, | 1=14 |
| 10வது | ,, | 14 + | ,, | 5+ ,, | 2=21 |

கீழிருந்து 2வது வரிசைக் கட்டங்களில்;

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2வது கட்டத்தில் | அந்தியம் | 1+ | கீழ் வரிசை உபாந்தியம் | | 1=2 |
| 3வது | ,, | 2+ | ,, | | 1=3 |
| 4வது | ,, | 3+ | ,, | | 1=4 |
| 5வது | ,, | 4+ | சதுர்த்தம் | 1+ கீழ் வரிசை உபாந்தியம் | 2=7 |
| 6வது | ,, | 7+ | ,, | 2+ ,, | 3=12 |
| 7வது | ,, | 12+ | ,, | 3+ ,, 5+ ஷஷ்டம் | 1=21 |
| 8வது | ,, | 21+ | ,, | 4+கீ. உபா. 7+ ஷஷ்டம் | 2=34 |
| 9வது | ,, | 34+ | ,, | 7+கீ. உபா.10+ ஷஷ்டம் | 3=54 |

இவ்வாறே மற்ற வரிசைக் கட்டங்களையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இந்த லகு மேருவிலிருந்து அறியப்படும் ப்ரஸ்தாரத் தொகைகள். 10 த்ருத கால் அளவுள்ள தாள ப்ரஸ்தாரத்தில் லகுவே இல்லாத ப்ரஸ்தாரங்கள் கீழ் வரிசை வலது கோடியிலிருக்கும் 21. ஒரு லகுவுள்ள ப்ரஸ்தாரங்கள் அதற்கு மேலுள்ள 54. இரண்டு லகுவுள்ள பேதங்கள் அதற்கு மேலுள்ள 61. மூன்று லகுவுள்ள பேதங்கள் 39. நான்கு லகுவுள்ள பேதங்கள் 15. ஐந்து லகுவுள்ள பேதம் 1. இவ்விதமே 9, 8, 7, 6, 5, 4, 3, 2, 1 ஆகிய த்ருத கால அளவுள்ள தாளப்ரஸ்தாரங்களில் லகுவே இல்லாத பேதங்கள், ஒரு லகுவுள்ள பேதங்கள், இரண்டு லகுவுள்ள பேதங்கள் முதலியவைகளைக் கண்டுகொள்ளலாம். ஒரு த்ருத தாளப்ரஸ்

தாரத்தில் லகுவே இல்லாததால் அவ்வித பேதம் 1 என்பது இதில் கிடைப்பது கவனிக்கத் தக்கது.

## குரு மேரு

குரு மேருவுக்குக் கீழ் வரிசையைக் காட்டிலும் அதற்கு அடுத்த மேல் வரிசையில் இடது புறம் முதல் 3 கட்டங்கள் குறைவாகவும், அதற்கு மேலுள்ள வரிசைகள் நான்கு, நான்கு கட்டங்கள் குறைத்துக்கொண்டும், கட்டங்கள் அமைக்கவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | 3 | 9 |
| | | | 1 | 2 | 5 | 10 | 20 | 38 | 72 |
| 1 | 2 | 3 | 5 | 8 | 14 | 23 | 39 | 65 | 109 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

இந்த கட்டங்களில் எண்கள் அமைக்கும் விதம்:—

ஒவ்வொரு வரிசையிலும் இடது கோடியிலுள்ள கட்டங்களில் '1' என்று எழுதிக்கொள்ளவும். கீழ் வரிசையில் இரண்டாவது கட்டத்தில் 2 என்று எழுதிக் கொள்ளவும். மூன்றாவது முதல் உள்ள கட்டங்களில் அந்தியம், உபாந்தியம், ஷஷ்டம் இவைகளின் கூடுதலை எழுதிக்கொள்ளவும். ஷஷ்டம் இல்லாவிடில் பஞ்சமத்தைச் சேர்த்துக்கொள்ளவும். மற்ற வரிசைக் கட்டங்களில் அந்திய, உபாந்திய, ஷஷ்டங்களோடு கீழ் வரிசை சதுர்த்தத்தையும் சேர்த்துக்கொள்ளவும். இதில் ஷஷ்டத்திற்குப் பதில் பஞ்சமம் சேர்த்துக்கொள்ளக் கூடாது. அப்போது கீழ் வரிசையில்,

3வது கட்டத்தில் அந். 2 + உபாந். 1 = 3
4வது „ „ 3 + „ 2 = 5
5வது „ „ 5 + „ 3 = 8
6வது „ „ 8 + „ 5 + பஞ்சமம் 1 = 14
7வது „ „ 14 + „ 8 + ஷஷ்டம் 1 = 23
8வது „ „ 23 + „ 14 + „ 2 = 39

9வது கட்டத்தில் அங். 39+ உபாங். 23+ ஷஷ்டம் 3= 65
10வது ,, ,, 65+ ,, 39+ ,, 5=109

கீழிருந்து இரண்டாவது வரிசையில்,

2வது கட்டத்தில் அங். 1 + கீழ் வரிசை சதுர்த்தம் 1= 2
3வது ,, ,, 2 + உபாங் 1 + கீ. வ. சது. 2= 5
4வது ,, ,, 5 + ,, 2 + ,, 3=10
5வது ,, ,, 10 + ,, 5 + ,, 5=20
6வது ,, ,, 20 + ,, 10 + ,, 8=38
7வது ,, ,, 38 + ,, 20 + ,, 14=72

மேல் வரிசையில்

2வது கட்டத்தில் அங். 1 + கீ. வ. சதுர்த்தம் 2=3
3வது ,, ,, 3 + ,, 5+உபாங்.1=6

இந்த அட்டவணையில் அந்தந்த த்ருத கால அளவுள்ள தாளங்களின் ப்ரஸ்தாரங்களில் குருவேயில்லாத பேதங்களையும், ஒரு குருவுள்ள பேதங்கள், இரண்டு குருவுள்ள பேதங்கள் முதலியவைகளையும் முறையே அடிவரிசையிலுள்ள எண், அதற்கு மேலுள்ள எண், அதற்கு மேல் வரிசையிலுள்ள எண் முதலியவைகளால் கண்டுபிடிக்கலாம்.

## ப்லுத மேரு

இதில் கீழ் வரிசைக்கு அடுத்த மேல் வரிசை 5 கட்டங்கள் குறைவாக அமைக்கப்படவேண்டும். அதற்கு மேல் உள்ளவைகள் ஆறு கட்டங்கள் குறைவாக இருத்தல் வேண்டும்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | 1 | 3 |
| | | | | | 1 | 2 | 5 | 10 | 22 | 44 | 89 | 74 |
| 1 | 2 | 3 | 6 | 10 | 18 | 31 | 55 | 96 | 169 | 296 | 520 | 812 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10. | 11 | 12 | 13 |

இந்தக் கட்டங்களில் எண்கள் அமைக்கும் விதம் :—

எல்லா வரிசைக் கட்டங்களிலும் இடது கோடியில் '1' என்று எழுதிக் கொள்ள வேண்டும். கீழ் வரிசையில் இரண்

டாவது கட்டத்தில் 2 என்று எழுதிக் கொள்ள வேண்டும். பிறகு மற்ற கட்டங்கள் அந்திய, உபாந்திய, சதுர்த்தங்களைச் சேர்த்து எழுதி வர வேண்டும். சதுர்த்தம் இல்லாவிடில் த்ருதீயத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். மற்ற வரிசைகளில் அந்திய, உபாந்திய, சதுர்த்தங்களோடு கீழ் வரிசை ஷஷ்டத்தையும் கூட்டி எழுத வேண்டும். இவைகளில் சதுர்த்தமில்லாவிட்டால் த்ருதீயத்தைச்சேர்த்துக் கொள்ளக்கூடாது.

இப்போது கீழ் வரிசையில்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3வது | கட்டத்தில் | அந். 2+ | உபாந். 1=3 | | |
| 4வது | ,, | ,, 3+ | ,, 2+ | த்ருதீயம் 1+ | 6 |
| 5வது | ,, | ,, 6+ | ,, 3+ | சது. 1+ | 10 |
| 6வது | ,, | ,, 10+ | ,, 6+ | ,, 2+ | 18 |
| 7வது | ,, | ,, 18+ | ,, 10+ | ,, 3+ | 31 |
| 8வது | ,, | ,, 31+ | ,, 18+ | ,, 6+ | 55 |
| 9வது | ,, | ,, 55+ | ,, 31+ | ,, 10+ | 96 |
| 10வது | ,, | ,, 96+ | ,, 55+ | ,, 18+ | 169 |
| 11வது | ,, | ,, 169+ | ,, 96+ | ,, 31+ | 296 |
| 12வது | ,, | ,, 296+ | ,, 169+ | ,, 55+ | 520 |
| 13வது | ,, | ,, 520+ | ,, 296+ | ,, 96+ | 812 |

அதற்கு மேல் வரிசையில்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2வது | கட்டத்தில் | அந். 1 + | | கீ. வ. ஷஷ்டம் 1+2 | | |
| 3வது | ,, | ,, 2 + | உபாந். 1 + | கீ. வ. ஷஷ்டம் | 2+ | 5 |
| 4வது | ,, | ,, 5 + | ,, 2 + | ,, | 3+ | 10 |
| 5வது | ,, | ,, 10 + | ,, 5 + | ,, 6+சது.1+ | | 22 |
| 6வது | ,, | ,, 22 + | ,, 10 + | சது. 2+ | ,, 10+ | 44 |
| 7வது | ,, | ,, 44 + | ,, 22 + | ,, 5+ | ,, 18+ | 89 |
| 8வது | ,, | ,, 89 + | ,, 44 + | ,, 10+ | ,, 31+ | 174 |

மேல் வரிசையில்,

2வது கட்டத்தில் அங். 1 + கீ. வ. ஷஷ்டம் 2 = 3

## சம்யோக மேரு

வேண்டிய அளவையுள்ள தாள ப்ரஸ்தாரத்தில் எல்லாம் த்ருதமாக உள்ள பேதங்கள், எல்லாம் லகுவாகவுள்ள பேதங்கள், எல்லாம் குருவாகவுள்ள பேதங்கள், எல்லாம் ப்லுதமாகவுள்ள பேதங்கள, த்ருத லகு சேர்ந்த பேதங்கள், த்ருத குரு சேர்ந்த பேதங்கள், த்ருதம் ப்லுதம் சேர்ந்த பேதங்கள், லகு குரு சேர்ந்த பேதங்கள், லகு ப்லுதம் சேர்ந்த பேதங்கள், குரு ப்லுதம் சேர்ந்த பேதங்கள், த்ருத, லகு, குரு சேர்ந்த பேதங்கள், த்ருத லகு ப்லுதம் சேர்ந்த பேதங்கள், த்ருத குரு ப்லுதம் சேர்ந்த பேதங்கள், லகு குரு ப்லுதம் சேர்ந்த பேதங்கள் முதலியவைகளைக் கண்டுபிடிப்பதற்காக ஏற்பட்ட மேருவுக்கு 'சம்யோக மேரு' என்று பெயர். இதற்குக் கட்டங்களை மேலிருந்து கீழாக வரிசைகளை அமைக்கவேண்டும் முதலில் நமக்கு வேண்டிய தாளத்தின் கால அளவையிலுள்ள த்ருதங்களின் எண்ணிக்கை வரையில் மேலிருந்து கீழாக 1, 2, 3 என்று எழுதிக் கொள்ளவேண்டும். அடுத்த மேலிருந்து கீழ் வரிசைகள் நான்கிலும் அதே எண்ணிக்கையுள்ள கட்டங்களை அமைக்க வேண்டும். 5வது வரிசையில் மேலே கட்டம் ஒன்றைக் குறைத்துக் கொண்டு பாக்கிக் கட்டங்களை அமைக்க வேண்டும். அதற்கு அடுத்த வரிசையில் மேலும் இரண்டு கட்டங்களைக் குறைக்க வேண்டும். அதற்கு அடுத்த இரண்டு வரிசைகளிலும் மேலும் ஒரு கட்டம் குறைக்க வேண்டும். மேலும் மற்றொரு கட்டத்தைக்குறைத்து அடுத்த மூன்று வரிசைகள் அமைக்க வேண்டும். அதற்கு அடுத்த வரிசையில் மேலும் 2 கட்டங்கள் குறைக்க வேண்டும். அதற்கடுத்த வரிசையில் ஒரு கட்டம் குறைக்க வேண்டும். அதற்கடுத்த வரிசையில் இன்னும் ஒரு கட்டம் குறைவாக அமைக்க வேண்டும். அப்பொழுது கட்டங்கள் கீழே கண்டபடி அமையும்:—

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 1 | S | S̀ | | | | | | | | | | | |
| 1 | 1 | 0 | 0 | 0 | | | | | | | | | | | |
| 2 | 1 | 1 | 0 | 0 | 0I | | | | | | | | | | |
| 3 | 1 | 0 | 0 | 0 | 2 | | | | | | | | | | |
| 4 | 1 | 1 | 1 | 0 | 3 | 0S | | | | | | | | | |
| 5 | 1 | 0 | 0 | 0 | 7 | 2 | 0S̀ | IS | | | | | | | |
| 6 | 1 | 1 | 0 | 1 | 11 | 3 | 0 | 2 | IS | SS̀ | 0IS | | | | |
| 7 | 1 | 0 | 0 | 0 | 20 | 4 | 2 | 0 | 0 | 0 | 6 | | | | |
| 8 | 1 | 1 | 1 | 0 | 32 | 5 | 3 | 3 | 2 | 0 | 12 | 0IS̀ | | | |
| 9 | 1 | 0 | 0 | 0 | 54 | 9 | 4 | 0 | 0 | 0 | 32 | 6 | | | |
| 10 | 1 | 1 | 0 | 0 | 87 | 13 | 5 | 7 | 3 | 2 | 60 | 12 | 0SS̀ | | |
| 11 | 1 | 0 | 0 | 0 | 143 | 18 | 6 | 0 | 0 | 0 | 134 | 32 | 6 | ISS̀ | |
| 12 | 1 | 1 | 1 | 1 | 231 | 24 | 7 | 11 | 4 | 0 | 251 | 60 | 12 | 6 | 0ISS̀ |
| 13 | 1 | 0 | 0 | 0 | 376 | 35 | 11 | 0 | 0 | 0 | 500 | 122 | 20 | 0 | 24 |

இந்தக் கட்டங்களில் மேலிருந்து கீழாக உள்ள முதல் 4 வரிசைகளில் நமக்கு வேண்டிய தாளத்தில் முதல் வரிசைக் கட்டத்தில் எல்லாம் த்ருதமாகவுள்ள பேதங்களின் தொகையும், இரண்டாவது வரிசைக் கட்டத்தில் எல்லாம் லகுவாகவுள்ள பேதங்களின் தொகையும், மூன்றாவது வரிசைக் கட்டத்தில் எல்லாம் குருவாகவுள்ள பேதங்களின் தொகையும், நான்காவது வரிசைக் கட்டத்தில் எல்லாம் ப்லுதமாகவுள்ள பேதங்களின் தொகையும் கண்டு கொள்ளப்படும். ஒவ்வொரு வரிசையிலும் எந்த அங்கங்கள் சேர்ந்த பேதங்கள் காட்டப்படுகின்றன என்பதை ஞாபகப்படுத்துவதற்காக அவைகளை வரிசைகளின் மேலே எழுதிக் கொள்ளவும். 5வது வரிசை த்ருதம், லகு சேர்ந்த பேதங்களின் தொகையைக் குறிக்கிறது. 6வது வரிசை த்ருதம் குரு சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். 7வது வரிசை த்ருதம் ப்லுதம் சேர்ந்த பேதங்களைக்குறிக்கும். 8வது வரிசை லகு குரு சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். 9வது வரிசை லகு ப்லுதம் சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். 10வது வரிசை குரு ப்லுதம் சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். 11வது வரிசை த்ருத லகு குரு சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். 12வது வரிசை த்ருத லகு ப்லுதம் சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். 13வது வரிசை த்ருத குரு ப்லுதம் சேர்ந்த பேதங்களைக் குறிக்கும். இந்தக் கட்டங்களில் எண்கள் அமைக்கும் விதம் வருமாறு :—

முதல் வரிசையில் எல்லாம் த்ருதமுள்ள பேதம் ஒன்றேயானையால் முதல் கட்டத்தில் 1 என்று எழுதிக்கொள்ளவேண்டும். 2வது வரிசையில் முதல் கட்டத்தில் பூஜ்யத்தையும், இரண்டாவது கட்டத்தில் 1ஐயும் எழுதிக் கொள்ள வேண்டும். மூன்றாவது வரிசையில் முதல் மூன்று கட்டங்களில் பூஜ்யத்தையும், நான்காவது கட்டத்தில் 1ஐயும் எழுதிக் கொள்ள வேண்டும். நாலாவது வரிசையில் முதல் 5 கட்டங்களில் பூஜ்யங்களையும், 6வது கட்டத்தில் 1ஐயும் எழுதிக் கொள்ள வேண்டும். முதல் நான்கு வரிசைகளிலும் மற்ற கட்டங்களில் முறையே த்ருத வரிசையில் அந்தியத்தையும், லகு வரிசையில் உபாந்தி

யத்தையும், குரு வரிசையில் சதுர்த்தத்தையும், ப்லுத வரிசையில் ஷஷ்டத்தையும் எழுதிக் கொள்ள வேண்டும்.

இரண்டு அங்கங்கள் சேர்ந்த தொகுதிகளின் வரிசைகளில் இலக்கங்கள் அமைக்கும் முறை :—

அந்தந்தத் தொகுதியிலுள்ள த்ருத, லகு, குரு, ப்லுதத்துக்காக அதே வரிசையிலுள்ள அந்திய, உபாந்திய சதுர்த்த ஷஷ்டங்களையும், முதல் நான்கு வரிசைகளிலிருந்தும் முறையே அந்திய, உபாந்திய, சதுர்த்த, ஷஷ்ட எண்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அப்படி முதல் நான்கு வரிசைகளில் எண்களை எடுத்துக் கொள்ளும்போது தொகுதியிலுள்ள அங்கங்களுக்கு ஏற்பட்ட அந்திய, உபாந்திய, சதுர்த்த, ஷஷ்டம் என்ற நிபந்தனையை ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ள வேண்டும். உதாரணமாக த்ருத லகு என்ற தொகுதிக்கான வரிசையில் எண் அமைக்கும் விதம்:— முதலில் அதே வரிசையில் த்ருதத்திற்காக அந்தியமும், லகுவுக்காக உபாந்தியமும், எடுத்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவற்றோடு த்ருத வரிசை லகு வரிசைகளிலிருந்தும் சேர்த்துக் கொள்ள வேண்டிய எண்கள் இருக்கின்றன. த்ருத, லகுக்களுக்கான அந்திய, உபாந்தியம் என்பதை த்ருத வரிசையில் உபாந்தியத்தையும், லகு வரிசையில் அந்தியத்தையும் மாற்றி எடுத்துக் கொள்ள வேண்டும். த்ருத குரு என்ற தொகுதிக்கான வரிசையில் எண்கள் அமைக்கும் விதம்:—முதலில் அதே வரிசையில் த்ருதத்திற்காக அந்தியமும், குருவுக்காக சதுர்த்தமும் எடுத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவற்றோடு த்ருத வரிசை குரு வரிசைகளிலிருந்தும் சேர்த்துக் கொள்ள வேண்டிய எண்கள் இருக்கின்றன. த்ருத குருக்களுக்கான அந்திய சதுர்த்தம் என்பதை த்ருத வரிசையில் சதுர்த்தத்தையும், குரு வரிசையில் அந்தியத்தையும் மாற்றி எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றவைகளையும் இவ்விதமே கண்டு கொள்க. அப்போது அடியிற்கண்டபடி எண்கள் அமையும் :—

5. த்ருத லகுத்தோகுதி:—

| | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அந்தியம் | + | உபாந்தியம் | + | த்ருதத்தில் உபாந்தியம் | + | லகுவில் அந்தியம் | | |
| முதல் கட்டத்தில் | இல்லை | + | இல்லை | + | 1 | + | 1 | = | 2 |
| 2-வது ,, | 2 | + | ,, | + | 1 | + | 0 | = | 3 |
| 3-வது ,, | 3 | + | 2 | + | 1 | + | 1 | = | 7 |
| 4-வது ,, | 7 | + | 3 | + | 1 | + | 0 | = | 11 |
| 5-வது ,, | 11 | + | 7 | + | 1 | + | 1 | = | 20 |
| 6-வது ,, | 20 | + | 11 | + | 1 | + | 0 | = | 32 |
| 7-வது ,, | 32 | + | 20 | + | 1 | + | 1 | = | 54 |
| 8-வது ,, | 54 | + | 32 | + | 1 | + | 0 | = | 87 |

இதே போல் இந்த வரிசையிலுள்ள மற்ற கட்டங்களிலும் எண்கள் அமைக்க வேண்டும்.

6. த்ருத குருத்தோகுதி:—

| | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அந்தியம் | + | சதுர்த்தம் | + | த்ருதத்தில் சதுர்த்தம் | + | குருவில் அந்தியம் | | |
| முதல் கட்டத்தில் | இல்லை | + | இல்லை | + | 1 | + | 1 | = | 2 |
| 2-வது ,, | 2 | + | இல்லை | + | 1 | + | 0 | = | 3 |
| 3-வது ,, | 3 | + | இல்லை | + | 1 | + | 0 | = | 4 |

| | | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அந்தியம் | + | சதுர்த்தம் | + | த்ருதத்தில் சதுர்த்தம். | + | குருவில் அந்தியம் | |
| 4-வது | ,, | 4 | + | இல்லை | + | 1 | + | 0 | = 5 |
| 5-வது | ,, | 5 | + | 2 | + | 1 | + | 1 | = 9 |
| 6-வது | ,, | 9 | + | 3 | + | 1 | + | 0 | = 13 |
| 7-வது | ,, | 13 | + | 4 | + | 1 | + | 0 | = 18 |
| 8-வது | ,, | 18 | + | 5 | + | 1 | + | 0 | = 24 |
| 9-வது | ,, | 24 | + | 9 | + | 1 | + | 1 | = 35 |

7. த்ருத ப்லுதத்தோகுதி :—

| | | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அந்தியம் | + | ஷஷ்டம் | + | த்ருதத்தில் ஷஷ்டம் | + | ப்லுதத்தில் அந்தியம் | |
| முதல் | கட்டத்தில் | இல்லை | + | இல்லை | + | இல்லை | + | 0 | = 0 |
| 2-வது | ,, | 0 | + | இல்லை | + | 1 | + | 1 | = 2 |
| 3-வது | ,, | 2 | + | இல்லை | + | 1 | + | 0 | = 3 |
| 4-வது | ,, | 3 | + | ,, | + | 1 | + | 0 | = 4 |
| 5-வது | ,, | 4 | + | ,, | + | 1 | + | 0 | = 5 |
| 6-வது | ,, | 5 | + | ,, | + | 1 | + | 0 | = 6 |
| 7-வது | ,, | 6 | + | ,, | + | 1 | + | 0 | = 7 |
| 8-வது | ,, | 7 | + | 2 | + | 1 | + | 1 | = 11 |

8. லகு குருத்தோகுதி :—

| | அதேவரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உபாங்தியம் | + | சதுர்த்தம் | + | லகுவில் சதுர்த்தம் | + | குருவில் உபாங்தியம் | | | |
| முதல் கட்டத்தில் | இல்லை | + | இல்லை | + | 1 | + | 1 | | = | 2 |
| 2-வது ,, | ,, | + | ,, | + | 0 | + | 0 | | = | 0 |
| 3-வது ,, | 2 | + | ,, | + | 1 | + | 0 | | = | 3 |
| 4-வது ,, | 0 | + | இல்லை | + | 0 | + | 0 | | = | 0 |
| 5-வது ,, | 3 | + | 2 | + | 1 | + | 1 | | = | 7 |
| 6-வது ,, | 0 | + | 0 | + | 0 | + | 0 | | = | 0 |
| 7-வது ,, | 7 | + | 3 | + | 1 | + | 0 | | = | 11 |
| 8-வது ,, | 0 | + | 0 | + | 0 | + | 0 | | = | 0 |

9. லகு ப்லுதத்தோகுதி :—

| | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உபாங்தியம் | + | ஷஷ்டம் | + | ல்குவில் ஷஷ்டம் | + | ப்லுதத்தில் உபாங்தியம் | | | |
| முதல் கட்டத்தில் | இல்லை | | இல்லை | + | 0 | + | 0 | | = | 0 |
| 2-வது ,, | இல்லை | | ,, | + | 1 | + | 1 | | = | 2 |
| 3-வது ,, | 0 | | ,, | + | 0 | + | 0 | | = | 0 |
| 4-வது ,, | 2 | | ,, | + | 1 | + | 0 | | = | 3 |

| | | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உபாந்தியம் | + | ஷஷ்டம் | + | லகுவில் ஷஷ்டம் | + | ப்லுதத்தில் உபாந்தியம் | | |
| 5-வது | ,, | 0 | | ,, | + | 0 | + | 0 | = | 0 |
| 6-வது | ,, | 3 | | ,, | + | 1 | + | 0 | = | 4 |
| 7-வது | ,, | 0 | | 0 | + | 0 | + | 0 | = | 0 |

10. குரு ப்லுதத்தோகுதி :—

| | | அதே வரிசையில் | | | | முதல் நான்கு வரிசைகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சதுர்த்தம் | + | ஷஷ்டம் | + | குருவில் ஷஷ்டம் | + | ப்லுதத்தில் சதுர்த்தம் | | |
| முதல் கட்டத்தில் | | | | இல்லை | + | 0 | + | 0 | = | 0 |
| 2-வது | ,, | | | ,, | + | 0 | + | 0 | = | 0 |
| 3-வது | ,, | | | ,, | + | 0 | + | 0 | = | 0 |
| 4-வது | ,, | | | ,, | + | 1 | + | 1 | = | 2 |
| 5-வது | ,, | | | ,, | + | 0 | + | 0 | = | 0 |
| 6-வது | ,, | 0 | + | ,, | + | 0 | + | 0 | = | 0 |
| 7-வது | ,, | 0 | + | 0 | + | 0 | + | 0 | = | 0 |

மூன்று அங்கங்கள் சேர்ந்த தொகுதிகளிலுள்ள வரிசைகளில் எண்கள் அமைக்க முதலில் அங்கங்களுக்காக அவற்றிற்குரிய அதே வரிசையில் அந்திய, உபாந்திய, சதுர்த்த ஷஷ்டங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பிறகு தொகுதியிலுள்ள அங்கங்களை இரண்டிரண்டாகச் சேர்த்து அந்த

இரட்டை அங்கத் தொகுதிகளுக்காக முதல் நான்கு வரிசைகளிலும் அந்திய, உபாந்திய, சதுர்த்த, ஷஷ்டங்களை மாற்றியெடுத்துக் கொண்டது போல் எடுத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது பெரிய அங்கங்களின் தொகுதியில் அந்திய, உபாந்திய, வரிசையில் முந்தியதையும் சிறிய அங்கங்களின் தொகுதியில் பிந்தியதையும் எடுத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

11. த்ருத லகு குருத்தொகுதி :—

| | அதே வரிசையில் அங்.+ உபாங்.+ சதுர்த்தம் | இரட்டை அங்கத்தொகுதிகளில் + லகுகுருவில் அங். | + த்ருதகுருவில் உபாங். | + த்ருதலகுவில் சது. | |
|---|---|---|---|---|---|
| முதல் கட்டம் | இல்லை | + 2 | + 2 | + 2 | = 6 |
| 2-வது ,, | 6 + இல்லை + இல்லை | + 0 | + 3 | + 3 | = 12 |
| 3-வது ,, | 12 + 6 + இல்லை | + 3 | + 4 | + 7 | = 32 |
| 4-வது ,, | 32 + 12 + இல்லை | + 0 | + 5 | + 11 | = 60 |
| 5-வது ,, | 60 + 32 + 6 | + 7 | + 9 | + 20 | = 134 |
| 6-வது ,, | 134 + 60 + 12 | + 0 | + 13 | + 32 | = 251 |
| 7-வது ,, | 251 + 134 + 32 | + 11 | + 18 | + 54 | = 500 |

12. த்ருத லகு ப்லுதத்தொகுதி: —

| | அதே வரிசையில் அங்.+உபாங்.+ஷஷ்டம் | இரட்டை அங்கத்தொகுதிகளில் +லகுப்லுதத்தில் அங். | +த்ருதப்லுதத்தில் உபாங். | +த்ருதலகுவில் ஷஷ்டம். | |
|---|---|---|---|---|---|
| 1வது கட்டத்தில் | இல்லை | + 2 | + 2 | + 2 | = 6 |
| 2வது ,, | 6 + ,, + இல்லை | + 0 | + 3 | + 3 | = 12 |

| | அதே வரிசையில் | | | | இரட்டை அங்கத்தொகுதிகளில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்.+உபாங்.+ஷஷ்டம் +லகுப்லுதத்தில் | | | | அங்.+த்ருதப்லுதத்தில் | | உபாங் +த்ருதலகுவில் ஷஷ்டம் | | | |
| 3வது ,, | 12+ | 6 + | இல்லை + | 3 | + | 4 | + | 7 | = | 32. |
| 4வது ,, | 32+ | 12 + | இல்லை + | 0 | + | 5 | + | 11 | = | 60 |
| 5வது ,, | 60+ | 32 + | ,, + | 4 | + | 6 | + | 20 | = | 122 |

13. த்ருத குரு ப்லுதத்தொகுதி :—

| | அதே வரிசையில் | | இரட்டை அங்கத்தொகுதிகளில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அங் +சது. +ஷஷ்டம்+குருப்லுதத்தில் | | அங்.+த்ருதப்லுதத்தில் | | சது.+ த்ருதகுருவில் ஷஷ்டம் | | | |
| முதல் கட்டத்தில் | இல்லை + | 2 | + | 2 | + | 2 | = | 6 |
| 2வது ,, | 6 + இல்லை + இல்லை + | 0 | + | 3 | + | 2 | = | 12 |
| 3வது ,, | 12 + ,, + ,, + | 0 | + | 4 | + | 4 | = | 20 |

14. லகு குரு ப்லுதத்தொகுதி :—

| | அதே வரிசையில் | | இரட்டை அங்கத்தொகுதிகளில் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உபாங். +சது.+ஷஷ்டம்+ குருப்லுதத்தில் | | உபாங்.+லகுப்லுதத்தில் | | +லகுகுருவில் ஷஷ்டம் | | | |
| முதல் கட்டத்தில் | இல்லை + | 2 | + | 2 | + | 2 | = | 6 |
| 2வது ,, | ,, + | 0 | + | 0 | + | 0 | = | 0 |

இவ்விதமே மற்ற கட்டங்களையும் பூர்த்தி செய்துகொள்ள லாம். நான்கு அங்கங்களுள்ள தொகுதிகளில் எண்கள் அமைக்க, முதலில் அதே வரிசையில் அவற்றின் அங்கங்களுக் குரிய அந்திய, உபாந்திய, சதுர்த்த, ஷஷ்டங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிறகு அந்தத் தொகுதியிலுள்ள அங்கங் களை மும்மூன்றாகச் சேர்த்து அந்த மூன்று அங்கத் தொகுதி களுக்குரிய வரிசைகளில் பெரிய அங்கங்கள் சேர்ந்த தொகுதி களில் அந்திய, உபாந்திய வரிசையில் முந்தியதையும், சிறிய அங்கங்களின் தொகுதியில் பிந்தியதையும் எடுத்துச்சேர்த்துக் கொள்ள வேண்டும்.

15. த்ருத, லகு, குரு, ப்லுதத்தொகுதி :—

| அதே வரிசையில் | மூன்று அங்கத்தொகுதிகளில் | | | |
|---|---|---|---|---|
| அந். + உபாந். + சது. + ஷஷ். + | லகு குரு ப்லுத | த்ருத குரு ப்லுத | த்ருத லகு ப்லுத | த்ருத லகு குரு |
| | அந். + | உபாந். + | சது + | ஷஷ். |
| முதல் கட்டத்தில் இல்லை | + 6 | + 6 | + 6 | + 6 = 24 |

## கண்ட ப்ரஸ்தாரம்

வேண்டிய அளவையுள்ள தாளத்திற்கு ப்லுதம், குரு, லகு, த்ருதம் ஆகிய நான்கு அங்கங்களோடு கூடிய ப்ரஸ்தாரங்களை முறைப்படி எழுதி, அவைகளில் த்ருதமேயில்லாத ப்ரஸ்தாரங் கள், 2 த்ருதமுள்ள ப்ரஸ்தாரங்கள், 4 த்ருதமுள்ள ப்ரஸ்தாரங் கள் முதலியவைகளின் தொகைகளையும், ஒரு த்ருதமுள்ளவை, 3 த்ருதமுள்ளவை, 5 த்ருதமுள்ளவை முதலிய பேதங்களின் தொகையையும் கண்டுபிடிக்கும் அட்டவணையே த்ருதமேருவாக அமைக்கப்பட்டது. இவ்விதமே பேதங்களைக் கண்டுபிடிப்பதற் காக லகு மேரு, குரு மேரு, ப்லுத மேரு முதலியவைகள்

அமைக்கப்பட்டன. ப்ரஸ்தாரம் செய்யும்போது த்ருதமில்லாத ப்ரஸ்தாரங்களை மட்டும் வரிசையாக எப்படி எழுதுவது, ஒரு த்ருதமுள்ளவை, 2 த்ருதமுள்ளவை, 3 த்ருதமுள்ளவை முதலிய ப்ரஸ்தாரங்களை மட்டும் எப்படி எழுதுவது, இப்படியே லகுவில்லாதவை முதலாகிய ப்ரஸ்தாரங்களை மட்டும் எழுதும் முறை எப்படி, குரு, ப்லுதங்கள் இல்லாதன முதலிய ப்ரஸ்தாரங்கள் மட்டும் எழுதுவது எப்படி என்ற முறைக்கே கண்ட ப்ரஸ்தாரம் என்று பெயர். இதை எழுதுவது எப்படி யெனில் ப்ரஸ்தாரம் எழுதும்போது நமக்கு வேண்டிய த்ருத, லகு, குரு, ப்லுதங்களின் எண்ணிக்கை வரக்கூடிய ப்ரஸ்தாரங்களை மட்டும் முறைப்படி எழுதியும், வேறு வகைப் பிரஸ்தாரங்கள் குறுக்கிட்டால் முதலில் எழுதவேண்டிய கீழ் அங்கத்தை விட்டுவிட்டு அதற்குக் குறைந்த அங்கத்தை எழுதுவது, அதற்கு வலது புறத்தில் உள்ள அங்கத்தின் கீழ் வரிசையை எழுதுவது என்கிற யுக்திகளைக்கையாண்டும் வலதுபுறமுள்ள மேல் அங்கங்களை எழுதிக்கொண்ட பிறகு குறையைப்பூர்த்தி செய்வதற்காக இடது புறம் எழுதும் அங்கங்களை நமக்கு வேண்டிய எண்ணிக்கையுள்ள த்ருதம் முதலியவை ப்ரஸ்தாரத்தில் அமையும்படி எழுதவும் வேண்டும்.

உதாரணமாக, ஒரு ப்லுத அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரத்தை எடுத்துக்கொள்வோம். முதலில் த்ருதமில்லாத ப்ரஸ்தாரங்களை மட்டும் எழுதுவோம். அப்போது முதல் ப்ரஸ்தாரம் S. அதன் கீழ் இரண்டாவது ப்ரஸ்தாரம் I S. நாம் முறைப்படி ப்ரஸ்தாரம் செய்வோமானால் லகுவின் கீழ் 0 எழுத வேண்டும். ஆனால் நமக்கு வேண்டிய கண்ட ப்ரஸ்தாரத்தில் த்ருதமில்லாத ப்ரஸ்தாரங்களே வேண்டும். ஆகையால் லகுவின் கீழ் த்ருதம் எழுதாமல் அதற்கு அடுத்த வலது பக்கத்திலுள்ள குருவின கீழ் லகுவை எழுதிக் கொள்ள வேண்டும். இப்போது குறையைப் பூர்த்தி செய்து கொள்ள ஒரு குருவை மட்டும் எழுதிக்கொள்ளலாம். அப்போது ப்ரஸ்தாரம் S I என்று அமையும். அடுத்த ப்ரஸ்தாரத்திற்கு குருவின் கீழ் லகுவும், வலது பக்கத்தில் மேல் உள்ள லகுவும் குறையைப்

பூர்த்தி செய்துகொள்வதற்கு இடது பக்கத்தில் மற்றொரு லகு போட்டுக் கொள்ளலாம். அதாவது I I I என்று ப்ரஸ்தாரம் அமையும். இதற்குக் கீழ் எப்படி ப்ரஸ்தாரம் செய்தாலும் த்ருதம் வந்தே தீரும். ஆகையால் இதனுடன் ப்ரஸ்தாரத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆக நமக்கு 4 த்ருதமில்லாத ப்ரஸ்தாரங்கள் கிடைத்திருக்கின்றன. த்ருதமேரு அட்டவணையில் 6 த்ருத கால அளவையுள்ள தாளத்திற்கான வரிசையில் த்ருதமில்லாத ப்ரஸ்தாரங்கள் 4 என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. இவ்விதமே, இரண்டு த்ருதமுள்ள ப்ரஸ்தாரங்களைப் போட வேண்டுமானால், ஒவ்வொரு ப்ரஸ்தாரத்திலும் 2 த்ருதங்கள் இருக்க வேண்டும். ஆகையால் முதல் ப்ரஸ்தாரம் 0 0 S என்று அமையும். இரண்டாவது ப்ரஸ்தாரம் குருவின் கீழ் 1. குறையைப் பூர்த்தி செய்வதற்கு குருவை உபயோகப் படுத்தாமல் ஒரு லகுவையும் அதன் பக்கத்தில் 2 த்ருதங்களையும் எழுதிக் கொள்ள வேண்டும். அதாவது இரண்டாவது ப்ரஸ்தாரம் 0 0 I I. மூன்றாவது ப்ரஸ்தாரத்திற்கு லகுவின் கீழ் 0. வலது பக்கத்திலுள்ள லகுவையும் எழுதிக்கொண்டால் குறையைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு லகுவையும், ஒரு த்ருதத்தையும் எழுதிக் கொள்ளலாம். அதாவது 3வது ப்ரஸ்தாரம் 0 I 0 I. நான்காவது ப்ரஸ்தாரம் I 0 0 I. 5வது ப்ரஸ்தாரம் 0 S 0. 6வது ப்ரஸ்தாரம் 0 I I 0. 7வது ப்ரஸ்தாரம் I 0 I 0 8வது ப்ரஸ்தாரம் S 0 0. 9வது ப்ரஸ்தாரம் I I 0 0. இனி பிரஸ்தாரம் செய்தால் இரண்டுக்கு மேற்பட்ட த்ருதங்கள் தான் கிடைக்கும். ஆகவே நமக்கு வேண்டிய கண்டப்ரஸ்தாரத்தில் 9 இரண்டு த்ருதங்களுள்ள பேதங்கள் கிடைக்கின்றன. த்ருத மேரு அட்டவணையிலும் இந்த ஒன்பதைக் கண்டுகொள்ளலாம். இவ்வாறே மற்ற கண்ட ப்ரஸ்தாரங்களையும் எழுதலாம்.

## த்ருதமேருவின் நஷ்டம்

த்ருதமேரு அட்டவணையில் நமக்கு த்ருதமேயில்லாத பேதங்களின் தொகையும் 1, 2, 3 முதலிய த்ருதங்களுள்ள பேதங்களின் தொகையும் நமக்கு கிடைக்கின்றன அல்லவா?

அந்த பேதங்களுள் இத்தனையாவது பேதம் என்ன ? என்ற கேள்விக்கும் அதன் பதிலுக்கும் த்ருதமேருவின் நஷ்டம் என்று பெயர். இதைக் கண்டுபிடிக்கும் வழி வருமாறு:—

கீழிருந்து முதல் வரிசையில்:—

(a) இரட்டைப்படை த்ருதகாலத்திற்குரிய கட்டங்களில் குறிப்பிட்ட பேதங்களில் நஷ்ட பிரச்னை:— வேண்டிய பேதத்தின் வரிசை எண்ணை குறிப்பிட்ட கட்டத்திலுள்ள தொகையிலிருந்து முதலில் கழிக்கவேண்டும். கழித்து வந்த மிச்சத்திலிருந்து அந்த கட்டத்திற்கு முந்திய மூன்றாவது கட்டத்திலுள்ள எண்ணைக் கழிக்கவேண்டும். கழிபட்டால் வேண்டிய பேதத்தில் ஒரு குரு கிடைக்கும். கழிபடாவிட்டால் ஒரு லகு கிடைக்கும். பிறகு மிச்சத்திலிருந்து ஐந்தாவது கட்டத்திலுள்ள எண்ணைக் கழிக்கவேண்டும். கழிபட்டால் முன்பு கிடைத்த குரு ப்லுதமாகிவிடும். முன்பு லகு கிடைத்திருந்தால் அதனுடன் ஒரு குருவும் கிடைக்கும். கழிபடாவிட்டால் முன்பு லகு கிடைத்திருந்தால் மற்றொரு லகு கிடைக்கும். முன்பு குரு கிடைத்திருந்தால் இப்பொழுது கழிபடாததினால் ஒன்றும் கிடைக்காது. இதற்குள் தாளத்தின் கால அளவைக்குரிய அங்கங்கள் கிடைத்துவிட்டால் இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். மேலே கழிப்பதற்கு யாதொரு மிச்சமும் இல்லாமல் கால அளவைக்குரிய அங்கங்களும் பூர்த்தியாகாமலிருந்தால் அதன் குறைவை லகுக்களால் பூர்த்தி செய்து கொள்ளவும். அங்கங்களும் பூர்த்தியாகாமலிருந்து, எண்ணும் மிச்சமிருந்தால் ஐந்தாவது கட்டத்தை அந்தியமாக வைத்துக் கொண்டு அதனுடைய த்ருதீய பஞ்சமங்களிலுள்ள எண்களை முன்போல கழிக்கவும். இப்படியே மிச்சம் இருக்கும் வரையில் அவசியமிருந்தால் செய்யவும்.

உதாரணமாக 8 த்ருதகால அளவையுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் த்ருதமேயில்லாத ப்ரஸ்தாரங்களின் தொகை கீழ் வரிசையிலுள்ள 7. இதில் முதல் ப்ரஸ்தாரத்தின் உருவம் என்ன என்றால் முதலில் ஏழிலிருந்து '1' ஐக்கழிக்க மிச்சம் 6.

அதிலிருந்து த்ருதியமாகிய '4'ஐக் கழிக்க மிச்சம் 2. கழிபட்ட தனால் ஒரு குரு கிடைக்கிறது. 2லிருந்து பஞ்சமமாகிய '2'ஐக் கழிக்க மிச்சம் பூஜ்யம். பஞ்சமமும் கழிபட்டதனால், முதலில் கிடைத்த குருவானது ப்லுதம் ஆகிறது. மிச்சம் ஒன்றுமில்லாததினால் தாள காலத்தின் குறையைப் பூர்த்தி செய்துகொள்ள இடது பக்கத்தில் ஒரு லகுவைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்படி முதல் ப்ரஸ்தாரம் I S என்று அமைகிறது. 2வது ப்ரஸ்தாரத்தைக் கண்டுபிடிக்க 7லிருந்து '2'ஐக்கழித்து, மிச்சமாகிய '5'லிருந்து த்ருதீய எண் '4'ஐக் கழிக்க மிச்சம் 1. கழிபட்டதால் ஒரு குரு கிடைக்கிறது. '1'லிருந்து பஞ்சமமாகிய '2' கழிபடாது. இதனால் ஒன்றும் கிடைக்காது. இப்போது தாள அங்கங்கள் பூர்த்தியாகாமலும், மிச்சமும் இருக்கிறது. ஆகையால் பஞ்சமத்தை அந்தியமாக வைத்துக் கொண்டு அதன் த்ருதீயமாகிய '1'ஐக் கழிக்க மிச்சம் பூஜ்யம். இப்பொழுது கழிப்பட்டதனால் இன்னொரு குரு கிடைக்கிறது. தாளத்தின் கால அளவும் பூர்த்தியாகிவிட்டது. ஆகவே 2வது ப்ரஸ்தாரம் S S. இவ்வாறே மற்ற பேதங்களையும் கண்டுகொள்க.

(b) ஒற்றைப்படை த்ருத காலத்திற்குரிய கட்டங்களில் குறிப்பிட்ட ப்ரஸ்தாரத் தொகைகளில் நஷ்டம்:— இதற்கு இந்த 'நூலின்' 26ம் பக்கம் அடிக்குறிப்பில் ஸர்வ ப்ரஸ்தார நஷ்டத்திற்குச் சொல்லப்பட்ட முறையையே உபயோகிக்கவேண்டும். அதாவது முதலில் அந்தியத்திலிருந்து நஷ்ட எண்ணைக் கழித்து, மிச்சத்திலிருந்து அதற்கு முந்தியுள்ள ஒவ்வொரு எண்ணையும் கழித்துக் கொண்டே வரவேண்டும். கழிபட்ட எண்ணிலிருந்து லகுவும், கழிபடாத எண்ணிலிருந்து த்ருதமும், சேர்ந்தாற்போல் இரண்டு எண்கள் கழிபட்டால் குருவும் கிடைக்கும். குருவுக்குப் பிறகு அதற்கடுத்த மூன்றாவது எண் கழிபட்டால் குரு ப்லுதமாகிவிடும். லகுவுக்குப் பிறகு ஒரு எண் கழிபடாமலிருந்தால் அதனால் கிடைக்கும் த்ருதத்தைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. ப்லுதம் குரு இவைகளுக்குப் பிறகு இரண்டு எண்கள் கழிபடாமலிருந்தாலும் அதனால்

கிடைக்கும் த்ருதங்களையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது. சர்வ ப்ரஸ்தாரமுறையில் நஷ்டத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு வரும்பொழுது ஒரு த்ருதம் கிடைத்துவிட்டால் அதற்குப்பிறகு த்ருதமேருவில் இரட்டைப்படை வரிசைக் கட்டங்களில் நஷ்டத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஏற்பட்ட விதியை அனுசரிக்க வேண்டும். உதாரணமாக 7 த்ருத கால அளவுள்ள தாளத்தில் ஒரு த்ருதமுள்ள ப்ரஸ்தாரங்கள் 12 என்பது நமக்கு த்ருத மேரு அட்டவணையிலிருந்து தெரிகிறது. இவற்றுள் முதல் ப்ரஸ்தாரம் என்ன என்ற கேள்விக்கு விடையளிக்க 12லிருந்து நஷ்ட எண்ணாகிய '1'ஐக் கழிக்க மிச்சம் 11. அதிலிருந்து அதற்கு முந்திய '4' ஐக் கழிக்க மிச்சம் 7. ஒரு லகு கிடைக்கிறது. அதிலிருந்து அதற்கு முந்திய '5'ஐக் கழிக்க மிச்சம் 2. லகு குருவாகிறது. அதிலிருந்து அதன் மூன்றாவது எண்ணாகிய '2'ஐக் கழிக்க மிச்சம் பூஜ்யம். மூன்றாவது எண் கழிபட்டதனால் குரு ப்லுதமாகிறது. குறைவைப் பூர்த்தி செய்ய ஒரு த்ருதத்தைப் போட்டுக் கொண்டால் முதல் பேதம் O S என்று அமைகிறது.

மற்றொரு உதாரணம்:—மேற்படி கட்டத்திலேயே 11வது பேதம் என்ன என்ற கேள்விக்குவிடையளிக்க 12லிருந்து நஷ்ட எண்ணாகிய '11'ஐக் கழிக்க மிச்சம் 1. அதிலிருந்து அதற்கு முந்திய எண்ணாகிய '4'ஐக்கழிக்கவேண்டும். கழிபடாததினால் ஒரு த்ருதம் கிடைக்கிறது. த்ருதம் கிடைத்து விட்டதனால் பேதத்தின் மற்ற அங்கங்களைக் கண்டுபிடிக்க இரட்டைப்படை வரிசைகளில் கையாண்டமுறையை உபயோகப்படுத்தவேண்டும். '4'ஐ அந்தியமாக வைத்துக்கொண்டு அதன் த்ருதீயத்திலுள்ள '2'ஐ '1'லிருந்து கழிக்கவேண்டும். கழிபடாததினால் ஒரு லகு கிடைக்கிறது. அதன் பிறகு பஞ்சமமாகிய '1'ஐக் கழிக்க மிச்சம் பூஜ்யம். கழிபட்டதனால் ஒரு குரு கிடைக்கிறது. 11வது பேதம் S I O என்று அமைகிறது. இவ்வாறே மற்ற ஒற்றைப் படைக் கட்டங்களிலும் நஷ்டத்தைக் கண்டு கொள்ளலாம்.

## கீழிருந்து முதல் வரிசையைத் தவிர மற்ற வரிசைகளில்

இந்தக்கட்டங்களில் நஷ்டத்தைக்கண்டுபிடிக்க, கீழிருந்து முதல் வரிசையில் இரட்டைப்படை த்ருத காலத்திற்குரிய கட்டங்களுக்குச் செய்தது போல் த்ருதிய, பஞ்சமங்களிலுள்ள எண்களைக் கழிக்க வேண்டும். அதோடு உபாந்தியத்தின் கீழ் எண்ணையும் கழித்தல் வேண்டும். கழிபட்டால் லகு கிடைக்கும். கழிபடாவிட்டால் த்ருதம் கிடைக்கும். ப்ரஸ்தாரத்தின் அங்கங்கள் பூர்த்தியாகாமல் இருந்து மிச்சமும் இருந்தால் பஞ்சமத்தை அந்தியமாக வைத்துக்கொண்டு மறுபடியும் முன் போல் கழித்துக்கொண்டு வரவேண்டும். அந்தியமாக வைத்துக் கொள்ளும் பஞ்சமம் ஒற்றைப்படை த்ருத வரிசையில் இருந்தால் கீழ் வரிசையில் ஒற்றைப்படைக்குச் செய்ததுபோலவும் இரட்டைப்படை வரிசையிலிருந்தால் கீழ் வரிசை இரட்டைப் படைக்குச் செய்தது போலவும் கழிக்க வேண்டும்.

உதாரணம்:—ஆறு த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் இரண்டு த்ருதமுள்ள பேதங்கள் 9 என்பது நமக்கு த்ருதமேரு அட்டவணையிலிருந்து தெரிகிறது. அவற்றுள் முதல் பேதம் என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிக்க, முதலில் 9லிருந்து நஷ்ட எண்ணாகிய '1'ஐக் கழிக்க வேண்டும். மீதி 8. அதிலிருந்து அதனுடைய உபாந்தியத்தின் கீழ் எண்ணாகிய '5'ஐக் கழிக்க மீதி 3. கழிபடுவதனால் ஒரு லகு கிடைக்கிறது. 3லிருந்து த்ருதீயமாகிய '3'ஐக் கழிக்க மிச்சம் பூஜ்யம். கழிபடுவதனால் லகு குருவாகிறது. கழிப்பதற்கு மேலும் எண் மிச்சம் இல்லாததினால் தாளத்தின் குறையைப் பூர்த்தி செய்ய 2 த்ருதங்களைப் போட்டுக் கொள்ள வேண்டும். இப்பொழுது முதல் பேதம் 0 0 S என்று அமைகிறது.

### த்ருதமேருவின் உத்திஷ்டம்.

நஷ்டத்தில் எந்த எண் கழிபட்டதனால் நமக்குத் தாளத்தின் அங்கங்கள் கிடைத்தனவோ அந்த எண்களை யெல்லாம் கூட்டி மொத்த ப்ரஸ்தாரத் தொகையிலிருந்து கழிக்க பேதத்தின் எண் வரிசை கிடைக்கும்.

கீழிருந்து முதல் வரிசையில்

(a) இரட்டைப்படை த்ருத வரிசைக் கட்டங்களில் உதாரணம்

எட்டு த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் த்ருதமேயில்லாத பேதங்களில் 11S என்ற உருவமுள்ள பேதத்தின் வரிசை எண்ணைக் கண்டுபிடிப்போம். முதலில் குரு இருப்பதனால் அது த்ருதிய எண்ணாகிய '4' கழிபட்டதனால் கிடைத்திருக்கவேண்டும். ஆகையால் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். லகுக்கள் கழிபடாத எண்களால் கிடைத்தவை. ஆகையால் அவற்றிற்கான எண்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. இப்பொழுது மொத்த பேதங்களின் தொகையான '7'லிருந்து '4'ஐக் கழிக்க மீதி 3. ஆகையால் குறிப்பிட்ட ப்ரஸ்தாரம் த்ருதமேயில்லாத பேதங்களில் மூன்றாவதாகும்.

(b) ஒற்றைப்படை த்ருத வரிசைக் கட்டங்களில் உதாரணம்:—

7 த்ருதகால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் ஒரு த்ருதமுள்ள பேதங்களின் தொகை 12 அவற்றுள் 0111 என்ற உருவமுள்ள பேதத்தின் வரிசை எண்களைக் கண்டுபிடிப்போம்.

இதற்கு ஸர்வ ப்ரஸ்தாரங்களுக்கு உத்திஷ்டம் கண்டுபிடிக்கும் முறையையே பின்பற்ற வேண்டும். முதலில் லகு இருக்கிறது. ஆகையால் அது உபாந்திய எண்ணாகிய '4' கழிபட்டதனால் கிடைத்திருக்கவேண்டும். அதன் பிறகு மற்றொரு லகு இருக்கிறது. நடுவில் ஒரு எண் கழிபடாததினால் தான் மற்றொரு லகு கிடைத்திருக்கிறது. கழிபட்டிருந்தால் முதலில் இருந்த லகு குருவாகியிருக்கும். ஆகையால் உபாந்தியத்திற்கு முந்திய எண்ணாகிய '5'ஐ விட்டுவிடவேண்டும். அதற்கு முந்திய '2'ஐச் சேர்த்துக்கொள்ளவேண்டும் அதன் பிறகு மற்றொரு லகு இருக்கிறது. இதற்காகவும் பஞ்சம எண்ணாகிய

"2'ஐ விட்டுவிட்டு ஷஷ்டமாகிய '1'ஐச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு உள்ள த்ருதம் கழிபடாத எண்ணி லிருந்து கிடைத்திருக்கவேண்டும். ஆகையால் அதற்காக ஒரு எண்ணையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது. இப்பொழுது கழிபட்ட எண்களாகிய 4, 2, 1 இவைகளைக் கூட்டி மொத்த பேதங்களாகிய 12லிருந்து கழிக்க மிச்சம் 5. குறிப்பிட்ட ப்ரஸ்தாரம் ஒரு த்ருதமுள்ள பேதங்களில் ஐந்தாவதாகும்.

கீழ் முதல் வரிசையைத் தவிர மற்ற வரிசைக் கட்டங் களில் உதாரணம்:

ஆறு த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் இரண்டு த்ருதங்களுள்ள பேதங்களின் தொகை 9. அவற்றுள் 0 0 S என்ற பேதத்தின் எண் வரிசையைக் கண்டுபிடிப்போம்.

முதலில் குரு இருக்கிறது. இது சேர்ந்தாற்போல் இரண்டு எண்கள் கழிபட்டதனுல் கிடைத்திருக்க வேண்டும். அதாவது உபாந்தியத்தின் கீழ் எண்ணுகிய '5'ம் த்ருதீய எண்ணுகிய '3'ம் கழிபட்ட எண்களாகையால் அவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு உள்ள 2 த்ருதங்கள் கழிபடாத எண் களிலிருந்து கிடைத்தவை. ஆகையால் அவற்றிற்காக எண் களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. இப்பொழுது கழிபட்ட எண்களாகிய '5'ஐயும் '3'ஐயும் கூட்டி மொத்தத் தொகையான 9லிருந்து கழிக்க மீதி 1. ஆகையால் ஆறு த்ருத கால அள வுள்ள தாள ப்ரஸ்தாரங்களில் இரண்டு த்ருதமுள்ள பேதங் களில் குறிப்பிட்ட பேதம் முதலாவதாகும்.

### லகுமேருவின் நஷ்டம்

கீழிருந்து முதல் வரிசையில்:

இந்த வரிசையிலுள்ள கட்டங்களில் லகுவேயில்லாத பேதங்களின் தொகைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதில் நஷ்டத்தைக் கண்டுபிடிக்க அந்தியத்திலிருந்து நஷ்ட பிரச்னை எண்ணைக் கழித்து மீதியிலிருந்து அதற்கு முந்திய கட்டங்களி

னுள்ள எண்களை வரிசையாக கழித்துக் கொண்டு வரவேண்டும். அப்பொழுது ஒரு எண் கழிபடாவிட்டால் த்ருதம் கிடைக்கும். கழிபட்டால் குரு கிடைக்கும். கழிபட்ட எண்ணினுல் ஒரு குரு கிடைத்து அடுத்து ஒரு எண்ணே அல்லது இரண்டு எண் களோ கழிபடாமலிருந்தால் அதற்காக த்ருதங்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. ஒரு குரு கிடைத்து அடுத்து ஒரு எண் ணே அல்லது இரண்டு எண்களோ கழிபடாமலிருந்து அதற் கடுத்த எண் கழிபட்டால் முதலில் கிடைத்த குரு ப்லுதமாகி விடும். இரண்டு எண்களுக்கு மேல் மூன்ருவது எண்ணும் கழிபடாமலிருந்து நான்காவது எண் கழிபட்டால் மற்ருெரு குரு கிடைக்கும்.

உதாரணம்:— 6 த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் லகுவேயில்லாத பேதங்கள் 5 என்பது லகு மேரு அட்டவணையிலிருந்து தெரிகிறது. இதில் 3வது பேதம் என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிப்போம்

முதலில் மொத்த பேதத்தொகையான '5'லிருந்து நஷ்ட எண்ணுகிய '3'ஐக் கழிக்க மிச்சம் '2'. மீதியிலிருந்து '5'க்கு மூந்திய எண்ணுகிய '3'ஐக் கழிக்கவேண்டும் கழிபடாததினுல் ஒரு த்ருதம் கிடைக்கிறது. பிறகு அதற்கு மூந்திய எண்ணுகிய '2'ஐ 2லிருந்து கழிக்க வேண்டும். மிச்சம் பூஜ்யம். கழிபட்ட தனுல் ஒரு குரு கிடைக்கிறது தாளத்தின் அங்கங்கள் பூர்த்தி யாகவில்லையாகையால் குறையைப் பூர்த்தி செய்ய ஒரு த்ருதத் தைப் போட்டுக் கொள்ள வேண்டும். இவ்விதம் மூன்ருவது பேதம் 0 S 0 என்று அமைகிறது.

கீழிருந்து முதல் வரிசையைத் தவிர மற்ற வரிசைகளில்:

"இதற்கு முதலில் மொத்த பேதங்களின் தொகையி லிருந்து நஷ்ட எண்ணைக் கழித்துப் பிறகு த்விதீயம், த்ருதீயத் தின் கீழ் உள்ள எண், பஞ்சமம் இவைகளைக் கழிக்கவேண்டும். இவ்வாறு கழித்துக்கொண்டு வரும்பொழுது எண் கழிபடா விட்டால் த்ருதமும், கழிபட்டால் லகுவும் கிடைக்கும். ஒரு

லகு கிடைத்துவிட்டால் அதன் பிறகு கழிக்கப்படவேண்டிய எண்களை அதன் கீழ் வரிசையிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது அந்தக் கீழ் வரிசைக்கான விதியை அனுசரிக்கவேண்டும். அங்கங்கள் பூர்த்தியாகாமல் கழிப்பதற்கு எண் மிச்சமும் இருந்தால் முன்போலவே மறுபடியும் வரிசைக் கிரமமாகக் கழித்துக்கொண்டு வரவேண்டும். எண் மிச்சமில்லாமலிருந்தால் குறைவை வேண்டிய அளவு லகுக்களால் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்." இது சங்கீத ரத்னாகரத்தில் உள்ள பகுதி (5வது அத்தியாயம் சுலோகம் 398-401) யிலிருந்து கிடைக்கிறது. ஆனால் இந்த முறையில் பல மாறுதல்கள் செய்தாலொழிய இதன்படி கழித்துப் பார்த்தால் நஷ்ட பேதத்தின் உருவம் சரியாகக் கிடைக்கவில்லை. உரையாசிரியர்களான கல்லிநாதர், ஸிம்ஹபூபாலர் இவர்களின் உரைப்படியும் வேண்டிய பேதத்தின் உருவம் கிடைக்கவில்லை.

## குருமேரு நஷ்டம்

கீழிருந்து முதல் வரிசையில்:

இதற்கு, முதலில் மொத்த பேதத் தொகையிலிருந்து நஷ்ட எண்ணைக் கழித்துக் கொண்டு, பிறகு அதற்கு முன்னுள்ள எண்களை சர்வ பிரஸ்தார நஷ்டத்துக்குக் கழிப்பது போல் வரிசையாகக் கழித்துக்கொண்டு வரவேண்டும். ஆனால் கிடைக்கும் குருவை ப்லுதமாக எழுதிக்கொள்ள வேண்டும். உதாரணம்:— 6 த்ருத கால அளவுள்ள தாளத்தின் பிரஸ்தாரங்களில் குருவேயில்லாத பேதங்கள் 14 என்பது குருமேரு அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. இதில் முதல் பேதம் என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிப்போம்.

முதலில் மொத்த பேதங்களின் தொகையான '14'லிருந்து நஷ்ட எண்ணாகிய '1'ஐக் கழிக்க மீதி 13. இதிலிருந்து '14'க்கு முந்திய எண்ணாகிய '8'ஐக் கழிக்க மீதி 5. கழிபடுவதினால் ஒரு லகு கிடைக்கிறது. மீதியிலிருந்து அதற்கு

முந்திய எண்ணாகிய '5'ஐக் கழிக்க பூஜ்யம். இப்பொழுது முதலில் கிடைத்த லகு குருவாகிறது. குருவை ப்லுதமாக மாற்றிக்கொள்ள வேண்டும். முதல் பேதம் S என்று ஏற்படும்.

கீழ்முதல் வரிசையைத் தவிர மற்ற வரிசைகளில் :

லகுமேருவில் கீழ் முதல் வரிசையைத் தவிர மற்ற வரிசைகளில் நஷ்டத்தைக் கண்டுபிடிக்க அனுசரித்த விதியையே உபயோகிக்க வேண்டும். ஆனால் த்ருதீயத்தின் கீழ் எண்ணை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக அதே வரிசை த்ருதீயத்தினுள்ள எண்ணை எடுத்துக்கொள்ள வேண்டும். அதே வரிசை பஞ்சமத்திற்குப் பதிலாக பஞ்சமத்தின் கீழ் எண்ணை எடுத்துக் கொள்ள வேண்டும். அங்கங்கள் பூர்த்தியாகாமலிருந்தால் குருவைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

உதாரணம் :— 6 த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் ஒரு குருவுள்ள பேதங்கள் 5. இதில் முதல் பேதம் என்ன ? என்ற கேள்விக்குப் பதிலளிப்போம். '5'லிருந்து நஷ்ட எண்ணாகிய '1'ஐக் கழிக்க மீதி 4. மீதியிலிருந்து முந்திய எண்ணாகிய '2'ஐக் கழிக்க மீதி 2. ஒரு லகு கிடைக்கிறது. '2'லிருந்து த்ருதீயமாகிய '1'ஐக் கழிக்க மீதி 1. முதலில் கிடைத்த லகு குருவாகிறது. '1'லிருந்து பஞ்சமத்தின் கீழ் எண்ணாகிய '2'ஐக் கழிக்க வேண்டும். கழிபடாததினால் ஒன்றும் கிடைக்கவில்லை. பிறகு '2'க்கு முந்திய எண்ணாகிய '1'ஐக் கழிக்க மீதி பூஜ்யம். கழிபடுவதினால் ஒரு லகு கிடைக்கிறது. முதல் பேதம் I S என்று அமைகிறது.

## ப்லுதமேரு நஷ்டம்

கீழிருந்து முதல் வரிசையில் :

இதற்கு ஸர்வ ப்ரஸ்தார நஷ்டத்திற்குச் செய்தபடி வரிசையாகக் கழித்துக்கொண்டு வரவேண்டும்.

உதாரணம் :— 6 த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் ப்லுதமேயில்லாத பேதங்கள் 18 என்று ப்லுத

மேருவிலிருந்து தெரிகிறது. இதில் 2வது பேதம் என்ன என்ற கேள்விக்குப் பதிலளிப்போம். முதலில் மொத்த பேதங்களின் தொகையான 18லிருந்து நஷ்ட எண்ணாகிய '2'ஐக் கழிக்க மீதி 16. '16'லிருந்து முந்திய எண்ணாகிய '10'ஐக் கழிக்க மீதி 6 ஒரு லகு கிடைக்கிறது. '6'லிருந்து முந்திய எண்ணாகிய '6'ஐக் கழிக்க மீதி பூஜ்யம். முதலில் கிடைத்த லகு குருவாகிறது. தாளத்தின் அங்கங்கள் பூர்த்தியாகாமலிருப்பதால் குறைவைப் பூர்த்தி செய்ய 2 த்ருதங்களைப் போட்டுக்கொள்ள வேண்டும். 2வது பேதம் 0 0 S என்று அமைகிறது.

கீழ் முதல் வரிசையைத் தவிர மற்ற வரிசைகளில்:

இதற்கு குருமேருவுக்குச் செய்ததுபோல் கழிக்க வேண்டும். அதே வரிசையில் கடைசி கட்டம் வரையில் கழித்துக்கொண்டு போகும்போது கடைசி கட்டத்தில் த்ருதமோ, லகுவோ, குருவோ கிடைத்தால் அது ப்லுதமாகி விடும். ப்லுதம் கிடைத்துவிட்டால் கீழ் வரிசையில் ஆதியிலிருந்து 6 எண்கள் தாண்டி 7வது எண்ணிலிருந்து மறுபடி கழிக்க ஆரம்பிக்க வேண்டும்.

உதாரணம்:— 8 த்ருத கால அளவுள்ள தாளத்தின் ப்ரஸ்தாரங்களில் ஒரு ப்லுதமுள்ள பேதங்கள் 5. இதில் முதல் பேதம் என்ன என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிப்போம். முதலில் '5'லிருந்து நஷ்ட எண்ணாகிய '1'ஐக் கழிக்க மீதி 4. '4'லிருந்து முந்திய எண்ணாகிய '2'ஐக் கழிக்க மீதி 2. கழிபடுவதனால் ஒரு லகு கிடைக்கிறது மீதியிலிருந்து அதன் முந்திய எண்ணாகிய '1'ஐக் கழிக்க மீதி 1. முதலில் கிடைத்த லகு குருவாகிறது. அதே வரிசைக் கடைசி கட்டத்தில் குரு கிடைப்பதால் குருவை ப்லுதமாக மாற்றிக்கொள்ள வேண்டும். மீதியிலிருந்து கீழ் வரிசையிலுள்ள 7வது எண்ணாகிய '2'ஐக் கழிக்க வேண்டும். கழிபடாததினால் அதற்கு முந்திய எண்ணாகிய '1'ஐக் கழிக்க வேண்டும். மீதி பூஜ்யம். கழிபடுவதனால் ஒரு லகு கிடைக்கிறது. முதல் பேதம் I S என்று அமைகிறது.

### த்ருத, லகு, குரு, ப்லுத மேருக்களின் உத்திஷ்டம்.

இவைகளுக்கு உத்திஷ்டம் கண்டுபிடிக்க ஸர்வ ப்ரஸ்தார உத்திஷ்டத்திற்கு அனுஸரித்த வழியையே அனுஸரிக்க வேண்டும். இந்த மேருக்களில் அந்தந்த வரிசைக்கு உத்திஷ்டம் கண்டுபிடிக்க நஷ்டத்தில் கழிபட்ட எண்களைக் கூட்டி மொத்த பேதத் தொகையினின்றும் கழிக்க பேதத்தின் எண் வரிசை கிடைக்கும்.

இவ்விதம் தாள ப்ரஸ்தாரத்தைச் சேர்ந்த கண்ட ப்ரஸ்தாரம், த்ருத மேரு, லகு மேரு, குரு மேரு, ப்லுத மேரு, ஸம்யோக மேரு இவற்றின் நஷ்ட உத்திஷ்டங்கள் இவை ஸங்கீத ரத்னாகரத்தில் கண்டபடி விளக்கப்பட்டிருக்கின்றன.

தாளத்தைப் பற்றிய இந்த அரிய பெரிய நூலும் அதைப் பூரணம் செய்யும் இம்முகவுரையும் ஸங்கீத வித்வான்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரிதும் உதவுமென நம்புகிறேன்.

ஸரஸ்வதி மஹால்,
தஞ்சை,
31—1—'55.

**K. வாஸுதேவ சாஸ்திரிகள்.**
ஆராய்ச்சி ஆசிரியர்.

# தாள சமுத்திரம்

### காப்பு

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

ஆள வருந்துரித[1] திரியக்கண்[2] ணால்வாய்[3]த்
தாளசமுத்திர நூற்றண் டமிழ்க்கு—நாளுந்
தடதவளத் தந்தத் தருண கிரணக்
கடகவளக் கைக்களிறே காப்பு. (1)

### பாயிரம்

திண்மை பெரிய திருவடி நாயன் மங்கை
வண்மை இருங்கேள் வளநாடன்—மண்மகள்சேர்
தோள் துணைவன் பரதசூடாமணி யுரைத்தான்
தாள சமுத்திர நூல்தான். (2)

தென்றல் வடிவுஞ் சிவனார் திருவடிவு
மன்றல் வடிவு மதன்வடிவுங்—குன்றாத
வேயினிசை வடிவும் வேதவடிவுங் காணி
லாய தாளங் காணலாம். (3)

ஆதிபரதத்தரிதான தாள நூல்வகை கேட்குமிடத்துச் சதுர்மேருப் பிறப்பென்றும், சண்மேருப் பிறப்பென்றும், நட்டோத்திட்ட பாதாளமென்றும், சர்வ பாதாளமென்றும், சையோகமென்றும்,[4]

---

1. துரித = (த்விரத-யானை) யானை முகத்தையுடைய.
2. திரியக்கண் = மூன்று கண்கள்.
3. நால்வாய் = தொங்குகின்றவாய்.
4. இவை தாள பிரஸ்தார வகை.

பதமுக முருமுகமென்றும், பஞ்சமுகமென்றும்,[5]

கணம், லவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், லகு, குரு, புலுதம் காகபாதமென்றும்,[6]

சீர்பொலி உருவம் தெய்வங் குணமொத்துப்
பார்பேர் பிறப்புப் பழங்கணம் — மேற்போன
சாதிகரத்தே யிசையும் தாளவியத்தே கிரகம்
ஓதுமீ ராறே யுறும்[7] (4)

இதனுட்பட்ட தின்னதென்றும், காலம், கிரியா, மானம், அளக்கு மரபென்றும்,[8]

கலை, கலாந்திரமென்றும்,[9]

தெட்சிணம், வார்த்திகம், சித்திரம். சித்திரதரம், சித்திர தமம், அதி சித்திரமென்றும்,[10]

ஆவாபம், நிஷ்கிராமம், விக்ஷேபம், பிரவேசம், சம்பை, தாளம், துருவம் சன்னிபாதமென்றும்[11]

---

5. இவை எதைக் குறிக்கின்றன என்பது விளங்கவில்லை.
6. இவை கால அளவைகள்.
7, சரஸ்வதிமகால் சுவடியில் ஏடுமுறிந்த இடங்கள் மதராஸ் O. M. லைப்ரரி நெ. R. 518 சுவடியிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.
8. காலம், க்ரியா, மானம் — இவை தாளத்தின் 10 அம்சங்களில் முக்கியமான மூன்று. "க்ரியையாகிற தாளம் போடுதலும். மானம் என்கிற அளவும் சேர்ந்தால் காலமே தாளமாகிறது."— ஸங்கீத தர்ப்பணம். 6வது அத். சு. 624.
9. 'கலை' என்பது தாளத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள உட்பகுதிகளின் எண்ணிக்கை.
10. தெட்சிணம், வார்த்திகம், சித்ரம், சித்ரதமம், சித்ரதரம், அதி சித்திரம் என்பவை பலநாடுகளில உள்ள மார்க்கபேதங்கள், அதாவது கால அளவையின் வகைகள்.
11. ஆவாபம் முதலிய நான்கும், சம்பை முதலிய நான்கும் தாளக் கிரியைகள். முதல் நாலிலும் சத்தமில்லாமல் கை அசைக்கப்படுகிறது. பிந்திய நாலிலும் சத்தத்துடன் தாளம் போடப்படுகிறது.

மார்க்கதாளம், தேசிதாளம், சங்கீர்ணதாளம், என்றும், சுத்ததாளம், சாளகம், சங்கீர்ண தாளம் என்றும், [12]

வட்டளவு, குமிழளவு, துணையளவு, நாணளவு, விரலள வென்றும், [13]

சமம், அதீதம், அனுகதம், விஷமகிரகமென்றும், [14]

ஏகச்சிரம், ஏககண்டச்சிரம், துரியச்சிரம், துரியகண்டச் சிரம், திரியச்சிரம், சதுரச்சிரம், சதுரகண்டச்சிரம், மிச்சிரம், மிச்சிரகண்டச்சிரம் என்றும் [15]

துரித கதி, மத்திமகதி, விளம்பிதகதி யென்றும் [16]

மகணம், ரகணம், ஸகணம், ஜகணம், பகணம், யகணம், நகணம், தகணம் மென்றும், [17]

இந்த எட்டுறுப்பின் குணம், குணதோஷமென்றும்,

உத்தம தெய்வம், மத்திமதெய்வம், அதமதெய்வமென்றும்,

சமை, சுரோதோவகை, கோபுச்சை, யாகிய 'யதி' யென் னும்லயத் தொகுதி யென்றும்,

இப்படிச் சொல்லப்பட்ட கிரமத்தால் வருகிற தாள வகை விரியும்வாறு கண்டுகொள்க.

---

12. மார்க்கம், தேசி, ஸங்கீர்ணம் - சுத்தம், ஸாளகம், ஸங்கீர்ணம் என்ற இருவகைப் பிரிவும் தாளங்களின் வகைக்குப்பெயர்.

13. வட்டளவு முதலியன கைத்தாளமென்னும் கனவாத்தியத்தின் அளவுகள்.

14. சமம் முதலியன நான்கும் தாளத்தில் பாட்டு ஆரம்பிக்கும் இடத்தைக்குறிக்கும் 'க்ரஹம்' என்பதாகும்,

15. இவை தாளத்தின் நடையைக்காட்டும் தாள ஜாதிகளின் பெயர்.

16. தாளத்தின் வேகங்கள்.

17. இந்த 8 கணங்களும் 3 அங்கங்கள் சேர்ந்த குரு, லகுக் கோவைகள்,

## நூலின் பொருளடக்கம்

தாள சமுத்திரம் தான் இன்னதென்று வகுப்போ மென்ப தற்கு வருமாறு:—

ஏய்ந்த நெடுந்தாளம் இரண்டெழுத்தின் சீர்பேர்கள்
சேர்ந்த அளவுருவம் தெய்வங்கள்—வாய்ந்தகுணம்
பேர்பெறவே யொத்தும் பிரமாணம் கணம்சாதி
பேர்சதுர மேருப் பிறப்பு. (5)

பேர்உயர் சண்மேருப் பிறப்புப் பிரிந்திலய
மாறில்லா நல்லயதி மார்க்கங்கள்—கூறும்
ஒருமாத்திரை மான மொத்தும் கிரகம்
திருவாய்த்த கஞ்சதளச் சீர். (6)

மெச்சு மணிக்கட்டு விரற்றெய்வம் வெவ்வேரு
யிச்சை பெறு தாள மியற்றுவகை — சச்சபுடத்
தாளமுதல் நூற்றெட்டுத்தாள நிலைப் பிரபந்தம்
நீளிருப தென்றூர் நினைந்து. (7)

என்றது இந்த மூன்று வெண்பாவிலும் சொல்லியதேதோ வென்னில்,

1. தாளமென்கிற இரண்டெழுத்தின் விதி,
2. கணமுதல் வருகிற காலவடிவின் பெயர்கள்,
3. அந்த வடிவினளவு,
4. அந்த வடிவின் சொரூபங்கள்,
5. அந்த வடிவுகளுக்கு அதிபதியாகிய தேவதைகள்,
6. அந்தச் சொரூபங்கள் நிற்கும் குணகுணங்கள்,
7. அந்தச் சொரூபங்களையொத்து மங்குலப் பிரமாணங்கள்,
8. அஷ்டகணம்,
9. பிரும, க்ஷத்திரிய, வைசிய சூத்திரனென்கிற நாலுசாதி களும்,

10. சதுர் மேருப்பிறப்பாகிய துரிதாதிபிரஸ்தாரம், சண் மேருப்பிரஸ்தாரமாகிய விராமாதிப் பிரஸ்தாரம்,

11. லயம்,

12. யதி,

13. மார்க்கங்கள்,

14. ஏக மாத்திராலக்ஷணவிதி,

15. சமம், அதீதம், அனாகதமென்று சொல்லப்பட்ட கிரகத்திரயங்கள்,

16. ஒத்தப்பட்ட கஞ்சதாள (காம்ஸ்யதாள)ப் பிரமாணம்,

17. மணிக்கட்டுக்கும், விரலுக்கும் அதிதேவதைகள்,

18. தாள் வொத்தாதிய ஆவாபாதிக் கிரியை,

19. சச்சபுட முதலாகிய நூற்றெட்டுத்தாளவடிவு,

20. நிலைபெற்றுவருகிற புஷ்பபுடப்பிரபந்தம்

ஆக இந்த இருபது கருமங்களையும் சொல்வோமென்றவாறு.

## 1. தாளம் என்ற சொல்லின் பொருள்

தாளமிரண்டெழுத்தின் தன்பெருமை தன்னைமிக
வாளகிரிசூழும் மகிதலத்தீர் — கேளீர்
தகரஉருச் சொக்கனார்தனியாம் ளகரம்
பகருமங்கயற்கண்ணி பற்று (8)

என்பது தாளமென்கிற இரண்டெழுத்தில் தகாரச்சுரூபம் அழகிய சொக்கனார்[1] ளகாரச்சுரூபம் அங்கயற்கண்ணியார்[2]

உபயச் சுரூபங் கூட்டாய் வரவே தாளமென்று பேராயிற்று.

---

1. சொக்கனார் = சொக்கும்படிச்செய்பவர், சுந்தரர்.
2. அம்கயல்கண்ணி = மீனாக்ஷி.

வாய்ந்த காலங் கிரியை மானமிவைகூடி
ஆய்ந்துவரிற் றாளமாமென்றார் — பூந்தொடிகேள்
கட்டுப்பெருங்காலம் கணுதி ஒத்துக்கை கிரியை
நட்ட ணடுமானமென நாட்டு (9)

என்பது காலம், கிரியை, மானம் கூடித்தாளமென்னும் பேராயிற்று.

'காலம்' என்பது கணுதிகளாக வருகிற காலவடிவின் பேர்கள்.

'கிரியை' யென்பது ஒத்துதல், ஒத்தித்தூக்குதல், ஒத்திச் சுழித்துத் தூக்குதல், இடம், வலம், மேல் கீழ் கைகாட்டல்.

'மானம்' என்பது ஒத்து முதலாகிய கிரியைகளுக்கு நடு நடுவருகிற சூனிய காலங்களாமென்றவாறு.

## 2. காலம் - அதன் பிரிவுகள்

கடியகணமிலவம் காட்டை நிமிடம்
துடிதுரிதந் தூயலகுத் தொன்மை — நெடிய
குருப்புலிதங் காகுவெனக் கூர்வடிவு பத்தும்
விரும்பவே காலமென வேண்டு. (10)

என்றது கணம், லவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், லகு, குரு, புலிதம், காகபாதம் என்னும் பத்துவடிவும் காலங்களாமென்றவாறு.

அர்க்க உதயத்தல ரம்புயமாதல்
விற்குவளை யாத லிதழெட்டும் — நிற்குமதில்
ஊசிமுனை தெரித்தால் ஓரிதழிற் செல்காலம்
மாசில் கணமாய் வரும். (11)

என்றது ஆதித்தன் உதயகாலத்தில் அலரப்பட்ட தாமரைப் பூவாதல், செங்கழுநீர்ப் பூவாதல் எட்டிதழடுக்கி அந்த அடுக்கிலே ஊசியைத் தெரித்தால் ஓரிதழிலே தாக்குகின்ற காலம்

கணம். கணமாவது ஆதித்தன் கிரணமென்றும், பஞ்சுத் தூளென்றும், நொய்மணலென்றும், மயிர்நுனி யென்றும் சொல்லப்படும் என்றவாறு.

காட்டு கண மெட்டிலவம் காட்டை யிலவமெட்டுத்
தீட்டட்ட காட்டை சேர்நிமிடம் — நாட்டுபுவி
யேற்ற கிரியை யிதற்கெட்டா திமையவர்முன்
தோற்றிவரும் நான்கும் தொகுத்து (12)

என்பது, கணம் 8 கொண்டது – லவம்

லவம் 8 கொண்டது – காட்டை

காட்டை 8 கொண்டது – நிமிடம்

இந்த அருவம் [1] நான்கும் பூமியின் கண்ணுள்ளோர்க்குக் கிரியைகளினாலே காணப்படாது. ஆதலால் இந்திர சபையிலே காணப்படும் என்றவாறு

வாராய் நிமிடவகை யெட்டும் வந்தேறிச்
சோராது தோன்றித் துடியாகும் — பேரா
திரண்டு துடியா லெழுந் துரிதம் பின்னை
இரண்டு துரிதம் லகு (13)

கொத்தலகு விரண்டுங் கூறுங் குருவாகுங்
கொத்தலகு மூன்றுங் குளிர்புலிதங் — கொத்தவழி
மானே லகுநாலும் வண்காகு வாகுமெனப்
பானேர் மொழியாய் பகர் (14)

என்றது நிமிடம் 8 கொண்டது – துடி

துடி 2 கொண்டது – துரிதம்

துரிதம் 2 கொண்டது – லகு

லகு 2 கொண்டது – குரு

லகு 3 கொண்டது – புலுதம்

லகு 4 கொண்டது – காகபாதம், என்றவாறு.

---

1. அருவம் = (அரூபம்) உருவமில்லாதது.

## தாளத்தின் அங்கங்களாகிய கால அளவைகளின் மறுபெயர்கள்

இனி, கால் மாத்திரையின் பெயர்

விந்து விரதி விராமங் கிளர்புள்ளி
பந்தமனுக்குப் படரொத்து—முந்துதுடி
சொன்னூர் கால்மாத்திரைக்குச் சொக்கனூர் மிக்கதமிழ்
நன்னுவலர்முன் னயந்து. (15)

இனி, அரைமாத்திரையின் பெயர்

சுழிகொம்பு வட்டம் துரிதம் சுடிரங்கண்
விழிகண்டம் சக்கிரம் வியோமம்—மொழிதிங்கள்
வெஞ்சனமே விந்துதமே மிக்கவரை மாத்திரையென்
றஞ்சனவேற் கண்ணு யறி. (16)

இனி, ஒரு மாத்திரையின் பெயர்

வாளிசரங் கோல் மாத்திரிகங் கால்செவ்வை
நீளுமொரு அக்கரமே நேர்கீற்று—நாளுமகிழ்
மிக்க வியாபகமே மேவுமிரேகை யெனத்
தக்க லகுபேராகச் சாற்று. (17)

இனி, இரண்டு மாத்திரையின் பெயர்

வல்லதுவி மாத்திரிகம் வான்சிலையே வக்கிரமே
நல்லபிறை தீர்க்கம் நாடுசிலை—வில்லுக்
குடில மெனத்தானே குருத்தனக்குச் சொன்னூர்
சடிலமுடிச் சொக்கனூர் தாம். (18)

இனி, மூன்று மாத்திரையின் பெயர்

சீரிய கோமூத்திரியந் திரியங்கம் பன்னகமாம்
பாரிய சாயோற் பவமாகும்—பேரா
. செய்ய திரிமாத்திரிகை தீர்க்க[1] முட னோங்காரந்
துய்ய புலிதப் பேராகச்சொல்.[2] (19)

இனி, நாலு மாத்திரையின் பெயர்

ஓசையிலா அன்னபத மொள் காகபாதமுட
னேசமிகும் புள்ளடியே நிச்சத்தம்—பேசாச்
சுவத்திகமே யென்றெண்ணிச் சேர் காகுவுக்குத்
தவத்தலைமைச் சொக்க ருரைத்தார். (20)

## 3. தாள அங்கங்களின் கால அளவு

இனி, அளவு

துன்று துடிகால் துரித மரையாகு
மொன்று லகுக்குருவே ஓரிரண்டு—நின்றுவெள
மூன்றுகுமே புலிதம் மொய்க்காகு நான்கெனவே
சான்றுகுஞ் சொக்க ருரைத்தார். (21)

---

1. தீர்க்கம்—சாமகானத்தில் மூன்று அக்ஷரகாலமுள்ள புலுதம் அடிக்கடி ப்ரயோகிக்கப்படுகிறது. அதற்கு 'தீர்க்கம்' என்றுபெயர். பொதுவாக 'தீர்க்கம்' என்பது நெட்டெழுத்தின் பெயர்.

2. அடையாறு மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ. வே. சா. அவர்களின் ஞாபகார்த்தச் சுவடி நிலையத்திலுள்ள 874 ம் நெ. சுவடியில் அடியிற்கண்ட பாடல் அதிகபாடமாகக் காணப்படுகிறது.

பாந்தள்உயிர் உகாரஞ் சர்ப்போற்பவம் பணியாம்
சேர்ந்த புயங்கந் தயங்கமுடன்—வாய்ந்ததொரு
மின்னார் நிவைபுலித மெனவீவை பெயரெனவே
சொன்னார் புலவோர் தொகுத்து.

## 4. தாள அங்கங்களின் குறியீடுகள்

இனி, உருவம்

விராம வுருப்புள்ளி மெய்த்துரிதம் வட்டம்
இராம சரமிலகு ஏந்தும்—இராமன்கை
வில்லுக்குருப் புலிதம் மின்காகு வென்றுரைக்கில்
அல்லுக் கியல் புள்ளடி.[1] (22)

### அங்கங்களின் வர்ணம் (நிறம்)

பச்சை விராமம் பகர்வட்டம் நீலமெனு
முச்சரித்த கோல்வெள்ளை யுன்னுகுரு—நிச்சயமாஞ்
சிகப்புப் பொன்னே புலிதஞ் சேர்காகுப் போத்துநிறம்
வகுத்துச் சொன்னார் முன்வகை.[2] (23)

---

1. விராமத்துக்குப் புள்ளியையும் '※'
துரிதத்துக்கு வட்டத்தையும் 'o'
லகுவுக்கு சரத்தையும் '|'
குருவுக்கு வில்லையும் 'S'
புலுதத்துக்கு மின்னையும் Ś
காகபாதத்துக்கு புள்ளடியையும் +

குறியீடுகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் ஏடுகளில்,

| | | | |
|---|---|---|---|
| கால் மாத்திரைக்கு | | அரைச் சந்திரனையும் | ◡ |
| அரை | ,, | முழுச் சந்திரனையும் | o |
| ஒரு | ,, | சரத்தையும் | \| |
| 2 | ,, | இந்த வடிவையும் | ட |
| 3 | ,, | இந்த வடிவுகளையும் | ஜ, 3 |
| 4 | ,, | இந்த வடிவையும் | + |

உபயோகிக்கிறார்கள்.

2. இதற்குப்பின் அடையாறு 874 ம் நெ. சுவடியில் பிராமண க்ஷத்திரிய, வைசிய, சூத்திர முதலிய வர்ணபேதங்களும் அடியிற் கண்டபடி சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்தணனே துரிதம் அம்பே அரசனும்
வந்த விராமம் வைசியனும்—கந்தமருஞ்
சாபந்தனக் குரைக்கில் சந்திரனே யென்றென்றுங்
கோபவிழி மானனையாய் கூறு.

வெய்யோன் புலிதம் வியன்றதோர் காகபதம்
பையபலசாதி பலரே—மெய்யுற்று
நின்ற குலத்தில் நிறைந்த வடிவீதென்றார்
மன்றகமழ் மாதே மதித்து.

## 5. அங்கங்களின் அதிதேவதைகள்

பந்தம் வருணன் படர்கோம்பு பஞ்சமுகன்
அந்தலகுச் சத்தி யடுத்தகுருச்—சந்திரனும்
அம்பிகையாம் [3]புலித மந்ததிரி மூர்த்தி
நம்புதிசை வான்காகு நாட்டு. (24)

(பொருள்) விராமத்துக்கு வருணனும், துரிதத்துக்குச் சிவனும், லகுவுக்குச் சத்தியும், குருவுக்குச் சந்திரனும், புலிதத்துக்குத் திரிமூர்த்திகளும், காகபாதத்துக்கு ஆகாசமுந் தெய்வங்களாகும்.

## 6. இனிக் குணம் - மாத்திரைகள் நிற்கும் நிலைகள்

வெய்ய விராமம் விளங்கத்தனியாது
துய்ய இனம் அல்லாற் றேன்றுதீ—செய்ய
குருப்புலிதங் கூடாது கோல்துரிதந்தன்மே
லுருப்பெறு மென்றான் மதுரையோன். (25)

என்றது விராமம் நிற்கும் குணம்:— விராமம் தனித்து வராது. இனத்தோடல்லாமல் வராது. குருவின்மேல் புலிதத்து மேல் வராது. லகுவின் மேல் துரிதத்தின் மேல் நிற்கும் என்றவாறு.

முந்தத்தனியாது முன்னிடையில் மீளாது
சந்தக்குரு முன்பின் சாராது—செந்திருவே
பேணிவருந் தாளநிலை பின்னே சுழிகோல்பின்
காணவருங் காகபதங் காண். (26)

என்றது காகபாதம் நிற்குங்குணம். — காகபாதம் தனித்து நில்லாது. முன்னே வராது. நடுவிலும் வாராது. குருவின் முன்னும் பின்னும் நில்லாது. (புலிதத்தின் மேலும் வாராது). யாதொரு தாளத்தின் பிற்பகுதியில், லகுவின் பின்னாவது, துரிதத்தின் பின்னாவது வரும் என்றவாறு.

---

என்றது துரிதம் பிராமணன், லகு க்ஷத்திரியன், விராமம் வைசியன், குரு சூத்திரன, புலிதம் சூரியன் (சண்டன்), காகபதம் பலசாதி என்றவாறு.

3. அம்பிகை = தேவதை

வட்டங் கணை வில்லும் வண்புலிதம் வேறினமாம்
சட்டம் பெறவே தனித்தனியாம் — இட்ட
மனைத்துங் கலந்து வரலாமெனவுஞ் சொன்னார்
இனத்தொங்கற்கூடல் இறை [1]. (27)

என்றது துரிதம், லகு, குரு, புலிதம் இந்த நாலு அங்கங்களும் மூன்றிடத்திலும், இனமாகவும் தனித்தும், ஒன்றோடொன்று கலந்து தாளமுடிவளவும் ப்ரஸ்தாரவிதிக்[2]கும், வரும் என்றவாறு.

## 7. இனி ஒத்துக் கிரியை-அங்குலப் பிரமாணங்கள்

தாக்கு விரல் நான்காகும் தனித்துரிதம் தாழாது
நோக்கு விரல் எட்டாகும் நூற்செவ்வை — நீக்குகுரு
எட்டங்குலத்தால் இசைய எடுத்தொத்தி
எட்டங்குலத்தா லிறக்கு (28)

இருபத்து நாலங்குலத்தால் இசையச்
சுருவத்தா லொத்திச் சுழித்துப் — பருவத்தில்
விட்டால் புலிதமாம் மேவும் முப்பத்திரண்டு
தட்டாது கை நிச்சத்தம். (29)

இடம் வலம் மேல்கீழிசையக் கைகாட்டக்
கடவது காகபதங்காண் — அடவுரைத்தார்
பூலோகம் சென்னியின்மேற் பூரித்துப் போற்றுமையாள்
ஆலோலங் கொண்ட சொக்கராய்ந்து. (30)

இம்மூன்று வெண்பாக்களின் பொருள் :— துரிதத்துக்கு நாலு அங்குலம் எடுத்தொத்தவும். லகுவுக்கு 8 அங்குலம் எடுத்தொத்தவும். குருவுக்கு 8 அங்குலம் ஒத்தி 8 அங்குலம் இறக்கவும். புலிதத்துக்கு 8 அங்குலம் ஒத்தி, 8 அங்குலம்

---

1. இனத்தொங்கற் கூடல் இறை = சூடும் தோளுக்கு இனமாகிய மாலையை யணிந்த மதுரைக்கிறையாகிய பரமேச்வரன்.

2. பிரஸ்தாரவிதி = தாளத்தின் மொத்த கால அளவை மாற்றாமல் அங்கங்களைப் பலவகையாக அமைக்கும் முறை.

சுழித்து, 8 அங்குலம் இறக்கவும். காகபாதத்துக்கு இடம், வலம் மேல், கீழ், இந்த நாலு திசையும் முப்பத்திரண்டங்குலப் பிரமாணம் கைகாட்டவும் என்றவாறு.

## பிறப்பு (மாத்திரை பிறந்த வகை)

பத்மாசனத்திருக்கும் பாவையிடைப்பங்குதுடி
சற்பாபரண மணி சங்கரனார் — மெய்ப்பான
கொன்றைச் சடைமுடியார் கொண்டகபாலத்தில்
ஒன்றிச் சுழி பிறந்ததுற்று. (31)

வாசுகி தன்னிடத்தில் வாளி பிறந்ததற்பின்
வீசுமதியிடத்தில் விற்பிறந்து — தேசுத்
திரிசூலந் தன்னிற் றிகழும் புலிதம்
எறிசூலம் காகபதமே. (32)

இந்த இரண்டு வெண்பாக்களின் பொருள்:— பத்மாசனத்திலிருக்கும் பராசக்தியினுடைய இடையிலே துடி பிறந்தது; பரமேச்வரன் கையிலிருக்கும் கபாலத்தில் துரிதம் பிறந்தது; வாசுகியான பாம்பினிடத்தில் லகு பிறந்தது. மதியினிடத்தில் குரு பிறந்தது; பரமேச்வரன் கையிலிருக்குஞ் சூலத்தில் புலிதம் பிறந்தது; பரமேச்வரன் எறியுஞ் சூலத்தில் காகபாதம் பிறந்தது என்றவாறு.

சூட்டுபிறை காலாம் சொல் நேத்திர மரையாம்
கூட்டுபர மன்பறையே கூறிரண்டாம் — தோட்டுப்
புயங்கமே மூன்றாய்ப்புகழ்வேதம் நாலாய்த்
தியங்கு மீசானரிடத்தே [1] (33)

என்றது சடையிலே தரிக்கப்பட்டிருக்கும் பிறை துடியாகவும், இரண்டு நேத்திரமும் துரிதமாகவும், பரமேச்வரன் ஒன்றாய் நின்றது லகுவாகவும், பரமேச்வரன் அர்த்தநாரீசுவரராய் நின்றது குருவாகவும், பரமேச்வரன் கழுத்திலே தரித்தபாம்பு புலிதமாகவும், நான்கு வேதமும் காகபாதமாகவும் நின்றது.

1. இச் செய்யுளும் இதன் உரையும் R. 518 நெ. O.M.L. சுவடியில் மட்டும் காணப்படுகிறது.

## 8. அஷ்டகண லக்ஷணம்

பகணமே யாதிகுருப் பால்மதியந் தெய்வம்
புகழ்பலனும் நல்ல புகழாம் — மகணம்
நிலையாகு மூன்றுகுரு நீணிலமே தெய்வந்
தொலையாத செல்வமெனச் சொல். (34)

ஆதிலகு யகணம் ஆனபுனலே கடவுள்
ஏதமறத் தழைத்தலே பலமாம் — போத
முழுதும் லகு நகணம் மொய்சுவர்க்கந் தெய்வம்
பழுதறும் ஆயுற்பலம். (35)

சேரு நடுக்குருவே செப்புஞ் செகணமொழி
கூறிரவி தெய்வம் கொடும் பிணியாங் — காரிகையாய்
ஈற்றுக் குருச்சகண மென்னுங்கடவுளது
காற்றுப் பரதேசங்காண். (36)

நடுவிலகு வந்தால் நயக்கும் ரகணம்
கடவுளனல் சாவுபலன்காட்டும் — முடிவிலகு
வெண்ணுந் தகணம் எழிலாம் பரங்கடவுள்
பண்ணு மிடியே பலம்[1]. (37)

---

1. R 518 ல் கணங்களை 'ப்ரஸ்தாரம்' என்ற மார்க்கப்படி எட்டுக் கணங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கும் வழி அடியிற் கண்ட பாடலில் கூறப்பட்டிருக்கிறது :—

கணமேருவின் சூத்திரம் —

மூன்றுகுடிலெழுதி முற்குடிலைக் குறைத்துத்
தோன்றவலத் துள்ளபடி யேதொகுத்து — மூன்றாய்
முயலவரை கால்குருவும் மூன்றுலகுக்கண்டால்
மயரசத செபந மாம்.

இதன் பொருள் :— மகணம், யகணம், ரகணம், சகணம், தகணம், செகணம், பகணம், நகணம் இவைகளின் வடிவை வரிசையாக அமைப்பதற்கு மும்மூன்று அங்கங்களாக குரு லகுக்களை அடியிற் கண்டபடி அமைக்கவும் :—

1. முதலில் மூன்று குரு (குடில் = வளைவு, அதாவது குரு) எழுதிக் கொள்ளவும்.

இந்த நான்கு வெண்பாக்களின் பொருள் :—

குரு லகுக்களான மூன்று அங்கங்கள் கொண்டது **'கணம்'** எனப்படும்.

---

2. பிறகு முதல் குருவின் கீழ் லகுவைப் போடவும். வலப் பக்கத்தில் மேலேயுள்ளபடி எழுதவும்.

3. இப்போது மூன்று அங்கங்களுக்குக் குறைந்தால் காலியான இடத்தில் குருவையே போட்டுக்கொள்ளவும்.

அப்போது அடியிற்கண்டபடி ப்ரஸ்தாரங்கள் அமையும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | — | மகணம் |
| 1 | 2 | 2 | — | யகணம் |
| 2 | 1 | 2 | — | ரகணம் |
| 1 | 1 | 2 | — | ஸகணம் |
| 2 | 2 | 1 | — | தகணம் |
| 1 | 2 | 1 | — | ஜகணம் |
| 2 | 1 | 1 | — | பகணம் |
| 1 | 1 | 1 | — | நகணம் |

அதே சுவடியில் கணங்களிலுள்ள குரு லகுக்களை ஊர்ப் பெயர்களாக அமைத்து ஓர் வாய்ப்பாடு அடியிற்கண்ட செய்யுளில் கொடுக்கப்பட்டிருக்கிறது ;—

துய்ய வாமந்தூர் புகாரூர் தென்சூரியூர்
மயிலைக்குவேறன் வயலூர் — செய்யவயல்
மாகாழியாகு விராலி பூவணம் மதுரை
மயரசத செபநமாம்.

இதன் பொருள் :—

| | | | | |
|---|---|---|---|---|
| வா — மந் — தூர் | = | 2 2 2 | = | மகணம் |
| பு — கா — ரூர் | = | 1 2 2 | = | யகணம் |
| சூ — ரி — யூர் | = | 2 1 2 | = | ரகணம் |
| ம — யி — லை | = | 1 1 2 | = | ஸகணம் |
| மா — கா — ழி | = | 2 2 1 | = | தகணம் |
| வி — ரா — லி | = | 1 2 1 | = | ஜகணம் |
| பூ — வ — ணம் | = | 2 1 1 | = | பகணம் |
| ம — து — ர | = | 1 1 1 | = | நகணம் |

ஆதி குரு பகணம் — தேவதை சந்திரன் — பலன் கீர்த்தி
மூன்றுகுரு மகணம் — தேவதை பூமி — பலன் செல்வம்
ஆதிலகு யகணம் — தேவதை புனல் — பலன் தழைத்தல்
மூன்றுலகு நகணம் — தேவதை சொர்க்கம் — பலன் ஆயுள்

**— இவை நான்கும் அமிர்தகணம்.**

நடுக்குருசெகணம் — தேவதை சூரியன் — பலன் வியாதி
ஈற்றுகுருஸகணம் — தேவதை காற்று — பலன் பரதேசம் செல்லுதல்
நடுலகு ரகணம் — தேவதை அக்னி — பலன் சாவு
ஈற்றுலகுதகணம் — தேவதை ஆகாயம் — பலன் வறுமை

**— இவை நான்கும் விஷகணம்.**

**இனி கணத்துக்கு நக்ஷத்திரம் வருமாறு :—**

கோதிலா மூன்றுகுரு மகணம் பூதலநாள்
தீதிலாக் கேட்டை குருவெய்தும் — ஆதிலகுத்
தானே யகணஞ் சதையஞ் சலமகிழ்ச்சி
மானே பலமாகு மற்று. (39)

மற்று நடுநேர் தீ வருரகணங் கார்த்திகைநாள்
உற்றபலன் சாவாகு மொன்றுதலாய்ப் — பெற்றகுரு
வந்தமுதல் வாயுவாஞ் சகணஞ் சோதிநாள்
புந்திதலம் பிழையாய்ப் போம் (40)

போற்றரிய மூன்றுலகு நகணம் பொன்னுலகத்
தோற்றும் பரணி நன்மை தோற்றுவிக்கும் — ஏற்ற [மிகு
மாதிகுருப் பகணம் அம்புலி மீன் புகழே
சோதிபெற வந்து தொகும். (41)

தொக்க நடுக்குருவிற் சூரியன் பூசஞ் சகணம்
மிக்கபலன் நோயாகு மெல்லியலாய் — அக்கண்
இறுதிநேர் வாய்த்தகண மைம்பூதம் பாற்குற்
குறுகுபலன் சூனியமாகும். (42)

இவைகளின் பொருள் :—

| கணம் | நட்சத்திரம் |
| --- | --- |
| மகணம் | கேட்டை |
| யகணம் | சதயம் |
| ரகணம் | கார்த்திகை |
| ஸகணம் | சுவாதி |
| நகணம் | பரணி |
| பகணம் | ரோகிணி |
| ஜகணம் | பூசம் |
| தகணம் | பூரம் |

(இப்பாடல்களிலுள்ள தேவதை முதலிய மற்ற விவரங்கள் முன் பாடல்களின் உரையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.)

முன்னமொழியெண் கணமும் மூன்றுறுப்பால் ஒவ்
[வொன்றும்
மன்னு லகுக்குருவே வைப்பாகும் — இங்நிலத்தில்
வல்ல பலதாளத்து வாத்திய கீதப்பிரபந்தஞ்
சொல்லுமுதலாற் கணமே சூட்டு (43)

